# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 25. தொலை பேசி: 23411

வள்ளுவர் ஆண்டு 2003, ஆனி 12உ (25-6-72) ஞாயிறு 1391 ஜ: அவ்13 புத்தகம் 25 இதழ் 31


## தேசியக்கொடி, தேசியகீதம் இல்லை!

# கல்வியமைச்சர் பின் வாங்கினார்!

### தமிழ் மாணவர்களுக்கு ஒரு வெற்றி!

பாடசாலைகளில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் தேசியக் கொடி ஏற்றப்பட வேண்டுமென்றும், தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டுமென்றும் கட்டளையிட்டிருந்த கல்வியமைச்சர், தமிழ் மாணவர்களும் தமிழர் கூட்டணித் தலைவர்களும் விடுத்த எச்சரிக்கையின் பயனாக இப்போது வெற்றிகரமாகப் பின் வாங்கி தமது கட்டளையை திரும்பப் பெற்றுக்கொண்டு விட்டார்.

இது தமிழ் மாணவர்களின் எதிர்ப்புணர்ச்சிக்கு கிடைத்த ஒரு பெரிய வெற்றியென்று கருதப்படுகிறது.

குடியரசு நாளன்று சிங்கக் கொடியுடன் ஒவ்வொரு மாணவனும் பாடசாலைக்கு வந்து புதிய அரசியல் சட்டத்துக்கு விசுவாசப்பிரமாணம் எடுக்கவேண்டும் என்று கல்வியமைச்சர் உத்தரவிட்டிருந்ததும் அந்த உத்தரவை தூக்கியெறிந்துவிட்டு, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சகல தமிழ் பாடசாலைகளிலும் தமிழர் கூட்டணியினரின் வேண்டுகோட்படி 22, 23, 24 ஆகிய மூன்று நாட்களும் நூற்றுக்குநூறுவீதம் பாட

(7ம் பக்கம் பார்க்க)

## தமிழர் உரிமைக் கிளர்ச்சியை நசுக்க

# ஆட்சியாளரின் இரகசியத் திட்டம்!

தமிழர் கூட்டணியினரின் தலைமையில் புதிய அரசியல் சட்டத்தை எதிர்த்து தமிழ் மக்கள் நடத்தி வரும் உரிமைக் கிளர்ச்சியை படிப்படியாக நசுக்கும் இரகசியத் திட்டமொன்றை அரசு இப்போது கடைப்பிடித்து வருவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

தமிழ் மக்கள் ஒரேயணியாகத் திரண்டு புதிய அரசியல் சட்டத்துக்கு எதிராக நடத்திவரும் உரிமைப் போராட்டத்தை ஒரே நாளில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு நசுக்கிவிட்டால், உலக நாடுகளின் கண்டனத்துக்கு ஆளாகநேரிடலாமென்று அரசுக்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாம். அத்துடன் அப்படி அடக்குமுறையை ஏவும் பட்சத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அமைச்சர்களும் அரசின் தமிழ் அடியாட்களும் ஒருபோதுமே நுழைய முடியாத ஒரு நிலையும் ஏற்பட்டுவிடுமென்றும், அப்படி நேருமானால் தமிழர்களும் தங்களை ஆதரிக்கிறார்கள் என்று உலகத்துக்கு கண்துடைப்பு காட்ட முடியாமல் போய் விடுமென்றும் அரசு தரப்பு வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இத்தகைய காரணங்களால் தமிழ் மக்களின் உரிமைக்கிளர்ச்சியைப்படிப்படியாக நசுக்கும் திட்டமொன்றை அரசு இப்போது பின்பற்றுவதாகவும், வட பகுதி பிரமுகர் ஒருவரே இத்திட்டத்தை வகுத்து கொடுத்திருப்பதாகவும்

(7-ம் பக்கம் பார்க்க)

## காசி ஆனந்தன் சிறையில் இன்று 16வது நாள்!

தமிழர் கூட்டணி செயலாளரும், உணர்ச்சிக்கவிஞருமான காசி ஆனந்தன் சிறையிலடைக்கப்பட்டு இன்றுடன் (25-6-72) 16நாட்கள் ஆகின்றன.

பொரளை சிறைச்சாலையில் இருக்கும் கவிஞருடனேயே வண்ணை — ஆனந்தனும் வைக்கப்பட்டுள்ளார்.

கவிஞரை அவரது தந்தையார் திரு. காத்தமுத்துவும், தம்பியார் சுதர்சனும் சென்ற கிழமை சென்று பார்த்தனர். கவிஞர் உற்சாகத்துடன் இருப்பதாகவும், தான் நன்றாக இருப்பதாக நண்பர்களுக்கும் அன்பர்களுக்கும் கூறும்படி அவர் தெரிவித்ததாகவும் திரு. காத்தமுத்து சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

கவிஞர் சிறையிலடைக்கப்பட்டு இன்றுடன் 16 நாட்கள் ஆகிய போதிலும், அவர் கைது செய்யப்பட்டதற்கான காரணம் எதையும் அரசாங்கம் இதுவரை அறிவிக்கவுமில்லை — நீதிமன்றத்துக்கு கொண்டு வரவுமில்லை. வழக்கறிஞர் கூட கவிஞரை சந்திப்பதற்கு இதுவரை வாய்ப்பளிக்கப்படவில்லை.

# சிங்களத்தில் பதிவு வைக்க என்னென்ன வசதிகள் தேவை?

## வடக்கு, கிழக்கு நீதிபதிகளிடம் நீதியமைச்சர் பீலிக்ஸ் கேட்கிறார்!

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களின் நடவடிக்கைகளை சிங்களத்தில் பதிவு செய்வதற்கு என்னென்ன வசதிகள்செய்யப்படவேண்டும் என்பதை நீதியமைச்சின் நிரந்தரச் செயலாளருக்கு அறிவிக்குமாறு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல மாவட்ட நீதிபதிகளையும் மாஜிஸ்ரேட்டுகளையும் நீதியமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா கோரியுள்ளார்.

அண்மையில் நீதியமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா, வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிபதிகளுக்கு நீதிமன்றமொழி பற்றி விடுத்துள்ள சுற்றறிக்கையொன்றிலேயே இவ்வாறு கேட்டிருக்கிறார்.

நீதியமைச்சரின் சுற்றறிக்கையிலுள்ள சில பகுதிகளை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டுள்ள இந்நாட்டு நாளேடுகள் மேற்கண்ட அமைச்சரின் கோரிக்கையை இருட்டடிப்பு செய்துவிட்டன.

வடக்கு, கிழக்கு மாகாண நீதிபதிகளுக்கு அனுப்பப்பட்ட அமைச்சரின். சுற்றறிக்கையில் கூறப்பட்டிருந்த—தினசரிகளால் இருட்டடிப்பு செய்யப்பட்ட பகுதிகள் வருமாறு:-

''அரசியல் சட்டத்தின் 11 (i) விதியின்படி சிங்களத்தில் பதிவுகள் வைக்கப்படவேண்டும் என்பது உண்மை. இதற்கு தேவையான ஊழியர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள். இந்தச் சிறிய இடைக்காலத்தில் தமிழில் பதிவுகள் வைக்கப்பட்டாலும், அவை ஒவ்வொன்றை

(7ம் பக்கம் பார்க்க)

# தமிழர் கூட்டணி இன்று கூடுகிறது!

புதிய அரசியல் சட்டத்துக்கு எதிராக அடுத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கு தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு இன்று (25—6—72) காலை யாழ் நகரில் கூடுகிறது.

தமிழ்காங்கிரஸ் தலைமைக் காரியாலயத்தில் கூடும் தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் அரசியல் சட்டத்தை தொடர்ந்து எதிர்த்து வருவதற்கான பல திட்டங்கள் விவாதித்து அங்கீகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரசியல் சாசனத்தை எதிர்ப்பதற்கு அஹிம்சை வழியிலான, ஒத்துழையாமை சட்டமறுப்பு போன்ற நடவடிக்கைகள் பற்றி கூட்டணி ஆலோசிக்கவிருக்கிறது. பல்வேறு வகையான

(7ம் பக்கம் பார்க்க)

## சிங்களம் வேண்டாம்!

பருத்தித் துறை மெதடிஸ்ட் மிஷன் பெண்கள் கல்லூரியில் சிங்களம் போதிக்க வேண்டாம் எனக் கோரும் தீர்மானம் மேற்படி கல்லூரி பெற்றோர் ஆசிரிய சங்கக் கூட்டத்தில் 76 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

**இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தூதுவர் அலுவலகத்தின் முன் அரசியல் சட்டம் தீக்கிரை!

## இலண்டனில் தமிழர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்!

இலங்கையின் புதிய குடியரசு அரசியல் சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மாபெரும் ஊர்வலம் ஒன்று மே மாதம் 20ந் திகதி அன்று நடைபெற்றது. எதிர்ப்பு ஊர்வலம் ஈழத் தமிழர் ஒற்றுமை இயக்கத்தினரால் நடத்தப்பட்டது. லண்டன் ஹைட் பார்க்கிலுள்ள ஸ்பீர்க்கஸ் கார்னரிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகியது. நூற்றுக்கணக்கான தமிழர்கள் எதிர்ப்பு அட்டைகளைத் தாங்கிக் கோஷமிட்டுக் கொண்டு சென்றனர்.

ஊர்வலத்தில் இலங்கை, தமிழகம், மலேசிய நாடுகளைச் சேர்ந்த ஏராளமான தமிழ் ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் கலந்து கொண்டனர். லண்டனில் தமிழ் பெண்மணிகளும் குழந்தைகளும் ஊர்வலம் ஒன்றில் பங்கு பற்றியது இதுவே முதல் தடவையாகும். கொட்டும் மழை வரவேற்பு அளிக்க தமிழ் மக்கள் வீரகோஷங்கள் இட்டுச் சென்றமை இந்த ஊர்வலத்தின் சிறப்பு அம்சமாக்கப்பட்டது. எதிர்ப்பு ஊர்வலத்தை முன்னிட்டு இலங்கை தூதரகமும் ஊர்வலப்பாதையும் பலத்த பொலீஸ் காவலில் வைக்கப்பட்டிருந்தது.

இலங்கைத் தூதரகத்தை பலத்த கோஷத்துடன் சென்றடைந்த ஊர்வலத்தினர் இலங்கையின் புதிய அரசியல் சட்டத்தை தூதுவரகத்தின் முன்னர் தீக்கு இரையாக்கினர். 'இலங்கையில் உள்ள சிறுபான்மையினரின் அங்கீகாரம் இல்லாத இந்தச் சட்டத்தை இங்கு தீக்கிரையாக்குவோம்' என இயக்கத்தின் முக்கியத்துவர்களிலே ஒருவரான திரு. மகரசிங்கம் அவர்கள் எடுத்துரைக்க திரு. ஜெயசீலன் அவர்கள் அரசியல் சட்ட நகலுக்கு தீ வைத்தார். 'இலங்கையின் புதிய அரசியல் சட்டம் — தீக்கிரையாக்கு' எனத் திரண்டிருந்த அனைவரும் பலத்த கோஷமிட்டனர்.

தூதுவரகத்திலிருந்து மீண்டும் ஊர்வலம் ஸ்பீக்கர்ஸ் கார்னரை வந்தடைந்தது. அங்கு ஈழத் தமிழர் ஒற்றுமை இயக்கத்தைச் சேர்ந்த திருவாளர்கள் மகரசிங்கம், ஜெயசீலன், திருஞானசம்பந்தன் ஆகியோர் வீரமுழக்கமிட்டனர். இலங்கையில் தமிழர்களை இனியும் நசுக்குவதை பார்த்து நாம் பொறுத்திருக்க மாட்டோம் எனவும், இந்த ஊர்வலத்தில் பங்கு பற்றிய தமிழர்கள் யாரேனும் எவ்விதத்திலும் பாதிக்கப்பட்டால் இயக்கத்தினர் வளாவிருக்கமாட்டார் எனவும் எச்சரிக்கை விடுத்தனர்.

இங்கிலாந்து பிரதமருக்கு தமிழர்களின் முறையீடு கொண்ட மனு ஒன்று அனைவராலும் ஒப்பமிடப்பட்டு, பின் இல 10, டவுணிங் வீதியிலுள்ள பிரதமரின் இல்லத்தில் அதிகாரிகளிடம் தமிழர் இயக்க முக்கியத்துவர்கள் திருவாளர்கள் மகரசிங்கம், பாலசுந்தரம், சிறினிவாசன் நாதன் ஆகியோரால் ஒப்படைக்கப்பட்டது.

கொட்டும் மழையில் வீர கோஷமிட்டு பெரிய எதிர்ப்பு அட்டைகள் பல தாங்கிச் சென்ற தமிழர் இயக்கம் லண்டன் தமிழரின் வெற்றி ஊர்வலமாக அமைந்தது. எதிர்ப்பு ஊர்வலத்தில் ஸ்கொட்லாந்துயார்டைச் சேர்ந்த இரகசிய பொலீசார் கலந்து கொண்டனர். ஊர்வலம் எதுவித அசம்பாவிதமுமின்றி அமைதியாக நடைபெற்றது—

—நன்றி: லண்டன் முரசு

---

## தந்தை செல்வாவுக்கு

### தமிழ் நாட்டு இளைஞர் கடிதம்!

70, நாராயண செட்டித்தெரு,
சேலம்-2.
தமிழ் நாடு.
9-6-72.

தந்தை திரு. செல்வா அவர்களுக்கு,

தனயன் மு. கார்த்திகேயன் எழுதிக்கொள்ளும் உறுதிப் பத்திரம், தங்கள் நாட்டில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளை எதிர்த்து தாங்கள் நடத்தும் போராட்டம் வெற்றி பெற்று ஈழத் தமிழ் நாட்டிற்கு விடுதலை கிடைக்க வேண்டுமென உளமார வாழ்த்துகின்றேன்.

இத்தோடு எனது தாய்நாடான தமிழ் நாட்டிற்காகவும் போராடி விடுதலை பெற்றுத் தருவேன். இதற்காக இரத்தக் கையெழுத்திடுகின்றேன். பேரறிஞர் அண்ணாவின் வழியில் தங்களின் துணிவையே துணையாகக் கொண்டு என் உயிரையும் விலையாகக் கொடுத்து தாய்நாட்டிற்கு விடுதலை தேடித் தருவேன்.

இது உறுதி!
வாழ்க தமிழ்!

இப்படிக்கு
தமிழன்,
ஒப்பம் மு. கார்த்திகேயன்
(இரத்தத்தால் ஒப்பமிட்டுள்ளார்)

---

## தன்மானம் காத்தனர் மட்டுநகர் மாணவர்கள்!

கடந்த 12.6.72 காலையிலே மட்டக்களப்பு அரசினர் கல்லூரியில் தேசிய கீதம் பாடப்பட்டது. அவ்வேளையில் மாணவ மாணவிகள் பலத்த கூக்குரல் போட்டனர். அப்போது கல்லூரி அதிபர் "தம்பி நீங்கள் எவ்வளவு சத்தம் போட்டும் பிரயோசனமில்லை. இது கந்தோரின் உத்தரவு" எனக் கூறினார். இருந்தும் சத்தம் ஓயவில்லை. தன்மானத் தமிழ் மாணவர்கள் தேசிய கொடியை ஏற்ற விடவில்லை; கொடியை கொண்டுபோ கொடியை கொண்டுபோ என்று கூக்குரலிட்டனர். இறுதியாக தேசியக்கொடி கம்பத்தில் ஏறவில்லை. கொடியை உள்ளே கொண்டு சென்றனர்.

---




மதிப்புக்குரிய கோவை அண்ணுவுக்கு.

உணர்ச்சிமிக்க எங்கள் கிழக்கு மாகாண மக்களின் மன உறுதியை எழுச்சியைத் தாங்கள் நேரிலே கண்டு அனுபவித்துப் பூரிப்படைந்து பொங்கிப் படைத்த வீர வரலாற்றுக் கட்டுரையினை 'அன்புள்ள நண்பனுக்கு' அழகு தமிழால் அள்ளி வழங்கியதைப் படித்து மெய்சிலிர்த்து உறுதி பெற்று நிமிர்ந்து நிற்கும் வேளையில் அண்ணு காசி ஆனந்தன் மன்னுவில் விசாரணைக்காகக் கைதானுர் என்னும் பத்திரிகைச் செய்தி நெஞ்சைப் பிளந்தது.

கொடிய அரசின் கொடியேற்று விழா தமிழனுக்குச் சாவு மணியடித்த விழா... அந்தக் கொடிய அரசுக்கு விசுவாசமாக அடிபணிய மறுத்துப் பதவியை உதறித் தள்ளி இலங்கையிலேயே பரபரப்பையும் ஈழத் தமிழகமெங்கும் புதிய சகாப்தத்தையும் படைத்த, புரட்சிக் கவிஞர், உணர்ச்சிக் கவிஞர், எழுச்சிக் கவிஞர், தமிழ்த் தொண்டன் காசி கைதானது வரலாறு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அமரர் வன்னியசிங்கம், அமரர் ஏகாம்பரம், அமரர் டாக்டர் நாகநாதன் போன்றோரின் கடந்தகால தியாகங்களின் உச்சியில் அண்ணு காசி ஆனந்தன் புன்முறுவலுடன் பொங்கியெழும் தோள்களுடன் நிற்பது தெரிகிறது. இச் செய்தி கேட்டு பொங்கி எழும் இளந் தமிழ்ச் சிங்கங்கள் எத்தனை? எங்கள் பங்கு என்ன என்ன என்று துடிக்கும் தினவெடுக்கும் தோள்களுக்கு அண்ணு கோவை என்ன ஆறுதல் தரப்போகிறீர்கள்? தங்கள் மந்திரம் செறிந்த வார்த்தைகளுக்காகக் காத்து இருக்கிறோம்.

—நோ. இராசம்மா
கல்முனை

★

கவிஞர் காசி ஆனந்தன் தமிழர்களின் உயிர். உயிரை சிறை வைத்துவிட்டு உடலை வைத்திருப்பது வேடிக்கையாகும். அடக்குமுறையினுல் அழகு தமிழரை அடிமையாக்கி விடலாம் என நினைப்பது முட்டாள்தனமாகும். மரியாதையாக எங்கள் உரிமை தரப்படல் வேண்டும். இன்றேல் உரிமை நிச்சயம் பெறப்படும்.

காசி ஆனந்தனைத் தொடர்ந்து ஆயிரமாயிரம் உடல்கள் சிறையை நிரப்பிடத் துடிக்கின்றன — இது எங்கள் கடைசி எழுச்சி.

எதுவரினும் ஏற்கும் திடகாத்திரம் எங்கள் எல்லோருக்கும் நிச்சயமாக உண்டு. எனவே, உயிரைச் சிறை வைத்திருக்கும் உத்தமர்களே உடல்களை ஏன் விட்டு வைத்திருக்கின்றீர்கள் ம்... ம்...ம்.... ஆகட்டும் உங்கள் ஆணவத் தர்பார்.

—திருகோணமலைக்
கவிராயர்.

*

ஈழத்தமிழ் மக்களின் இதயங்களில் எல்லாம் சுதந்திர வேட்கையையும் விடுதலை உணர்ச்சியையும் நிமிடத்திற்கு நிமிடம் வளர்த்து வரும் சுதந்திரன் ஆசிரியர் கோவை அண்ணு அவர்கட்கு:—

வேதனை இதயத்தை வாட்டிட, சோகம் உள்ளத்தினைக் கவ்விட நாதியற்ற இனமாக நந்தமிழினத்தார் இந்நாட்டில் நலிந்திட வேண்டியேற்பட்ட வாதனைமிக்க நிலையை எண்ணி எண்ணி வடிகின்ற கண்ணீரைத் துடைத்தபடி தாங்கள் எழுதிய அரசியல் மடலை, வடிகின்ற கண்ணீரைத் துடைத்தெறியவும் மறந்து வாசித்தபோது கண்கள் குளமாகி எழுத்தை மறைத்திட்ட போதுதான் வடியும் கண்ணீரைத் துடைத்திட எழுந்தது என் கை.

எப்போது சுதந்திரன் வருவான் எனக் காத்திருந்து வந்தவுடன் நான் முதல் நீ முதல் என்று போட்டி போட்டு இறுதியில் ஆளுக்கொரு பேப்பராக வாசிக்கும் சுதந்திரன் பிரியர்கள் எங்கள் குடும்பத்தினர். சுதந்திரனை ஆவலோடு படித்துவரும் எனக்கு அதில் ஒரு பெரும் குறை இருப்பது மனவருத்தத்தை அளிக்கின்றது. அதாவது மங்கையர்க்கென்று ஒருபகுதி யேனும் அப்பத்திரிகையில் இடம் பெறுமல் இருப்பதுதான் அக்குறை. விரைவிலேயே சுதந்திரனில் மங்கையர் புரட்சிப் பக்கங்களை எதிர் பார்க்கிறேன்.

—செல்வி பிரேமா
நடராசா
யாழ்ப்பாணம்.

● மங்கையருக்கென்று தனியே ஒருபக்கம் ஒதுக்காவிட்டாலும், மங்கையர்கள் கட்டுரைகள் எழுதினுல், தகுதியாயின் அவை நிச்சயம் சுதந்திரனில் இடம் பெறும். தயங்காது எழுதுங்கள் சகோதரி.

— ஆசிரியர்.

---

## பதவி ஆசைக்காக மொழிக்கு துரோகமா?

சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் தாம் அனுப்பிய வருடாந்த பாடசாலை உடல் வல்லுனர் போட்டி அழைப்பிதழில் அழைப்பு அனுப்புகிறவரின் பெயர் போடப்பட வேண்டிய இடத்தில் (From) சிங்கள மொழியில், "பி. ஏகாம்பரம், விதுஹல்பதி ஸ்கந்தவரோதய, சுன்னுகம" என்று சிங்களத்தில் போட்டிருக்கிருராம்.

பதவி ஆசை பிடித்து தமிழை விற்கும் இவரது துரோகத்தனத்தைப் பற்றி சுன்னுகம் முழுவதும் இப்போது கேவலமாகப் பேசுகிறதாம். இவரது போக்கால் பெற்றோர்களும் மாணவர்களும் அதிருப்தியடைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் கனியும்வரை

# 'கனலை' வளர்த்திருப்போம்!

அன்பு நண்பா,

இந்தக் கிழமை துவக்கத்தில் நம்முடைய தமிழரசுக் கட்சியின் பொதுச் சபையும், தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுவும் யாழகத்தில் கூடி புதிய அரசியல் சட்டத்திற்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய அடுத்த செயல் திட்டம் பற்றி ஆராய்ந்திட விருக்கின்றன. இக் கூட்டங்களில் எடுக்கப்பட விருக்கும் முடிவுகளை அறிந்திடுவதில் தமிழினம் மட்டுமன்றி இந்நாடும் உலகமும் மெத்த ஆர்வத்துடன் இருந்து வருகின்றன என்பதை நாம் அறிவோம்.

புதிய அரசியல் சட்டம் தமிழினத்துக்கு தீங்கானது; தமிழினத்தை அடிமைப்படுத்தி அழித்தொழித்திடுவது; தமிழர்களை மூன்றாம் தர நிலைக்குத் தள்ளி சிங்களவர்களை நாட்டின் ஏகபோக எஜமானர்களாக்கிடுவது; சிங்களத்துக்கும் பௌத்தத்துக்கும் முதலிடம் அளித்திடுவது; செந்தமிழையும், இந்து, இசுலாமிய, கிறித்தவ மதங்களையும் சிறுமைப் படுத்திடுவது; தமிழினத்தின் அடிப்படை உரிமைகளை முழுமையாக அபகரித்திடுவது; பத்து இலட்சம் மலையகத் தமிழர்களின் குடியுரிமையை நிரந்தரமாகப் பறித்திடும் பச்சைத் துரோகச் சட்டங்களை தன்னகத்தே கொண்டது; என்கின்ற கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டிய அளவுக்கு எடுத்துச் சொல்லியாகிவிட்டது.

புதிய அரசியல் சட்டம் தமிழினத்தின் மரண சாசனம் என்பதையும், அச்சட்டத்தினை தமிழினம் ஒருபோதுமே அங்கீகரிக்காது; அச் சட்டத்திற்கு ஒருபோதுமே கட்டுப்படாது; என்பதையும் தெளிவாகவும் தீர்க்கமாகவும், திட்டவட்டமாகவும் எடுத்துக் கூறிவிட்டோம் — தமிழினத்தின் வெறுப்பையும், எதிர்ப்பையும் ஆதிக்கபுரியினருக்கு மிகவும் மூர்த்தண்ணியமாக எடுத்துக் காட்டியும் விட்டோம்!

எனவே புதிய அரசியல் சட்டத்தினால் தமிழினத்திற்கு ஏற்படும் இழி நிலையையும் பயங்கர ஆபத்துக்களையும் மேலும் மேலும் நாம் எடுத்துக்கூறிக் கொண்டிருப்பதில் எதுவித அர்த்தமுமில்லை — ஏனெனில் புதிய அரசியல் சாசனம் தம்மை அடிமைப்படுத்தி முற்றாக அழித்தொழிப்பதற்கே கொண்டு வரப்பட்டுள்ளதென்ற உண்மையை மான உணர்ச்சியுள்ள ஒவ்வொரு தமிழ் மகனும் இன்று உணர்ந்து கொண்டுவிட்டான்!

புதிய அரசியல் சட்டத்துக்காக இப்பொழுதும் யாராவது தமிழர்கள் வக்காலத்து வாங்கிக் கொண்டிருப்பார்களானால், அப்படிப்பட்டவர்கள் ஒன்றில் மனச்சாட்சியும் மான உணர்வும் அற்ற மரக்கட்டைகளாக இருந்திட வேண்டும் — அல்லது தமிழினத்தின் அசல் வித்துக்களாக பிறக்காதவர்களாக இருந்திட வேண்டும். இத்தகைய, மானம், ரோசம், சூடு சொரணையற்ற சோற்றுலடித்த பிண்டங்களைத் தவிர சுயமரியாதையுள்ள எந்தத் தமிழனும் புதிய அரசியல் சட்டத்துக்கு வக்காலத்து வாங்க மாட்டான்!

புதிய அரசியல் சாசனத்தை தமிழினம் ஏற்றிட வேண்டுமென்று வாதாடுவோர்—கையில் விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் விழச்செல்லும் கபோதிகள்; பாலில் நஞ்சுகலந்திருப்பது தெரிந்தும், அதை மற்றவருக்கு ஊட்டிட துடித்திடும் நயவஞ்சகர்கள்; வலியச் சென்று தூக்கு கயிற்றை முத்தமிடச்சொல்லும் குடிகேடர்கள்; என்றே கூறுவேன்!

நண்பா, புதிய அரசியல் சட்டம், தமிழினத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்துத் தமிழ்க்கட்சிகளினதும் குறைந்த பட்சக் கோரிக்கைகளை உள்ளடக்காததாலும், ஐ. நா. மனித உரிமை சாசனத்தில் கூறப்பட்ட உரிமைகளைக் கூட தமிழ் மக்களுக்கு அது வழங்காததாலும், அதை நிராகரித்திட வேண்டுமென்கின்ற தீர்மானமொன்றையாழ். மாநகர சபையில் கொண்டு வரப்போவதாக துணைமேயரும், பழம் பெரும் இடதுசாரித் தலைவர்களில் ஒருவருமான திரு. ஆ. துரைராசசிங்கம் அறிவித்திருப்பதனை ஏடுகளில் படித்திருப்பாய் — தமிழர்கள் புதிய அரசியல் சட்டத்தை எவ்வளவு கடுமையாக எதிர்க்கிறார்கள் என்பதற்கு இந்த ஒரு உதாரணமே போதுமே! இது போன்ற தீர்மானங்களை தமிழ் ஈழத்தின் ஒவ்வோர் ஊராட்சி நகராட்சி, மாநகராட்சி மன்றங்களும் நிறைவேற்றிடவேண்டும்!

நண்பா, நீதிமன்றத்திலும், நிர்வாகத்திலும், சில சலுகைகளை அரசு அளித்திட முன்வந்திருப்பதாகவும் இது ஒத்துழைப்பு தமிழரின் ஒரு பெரும் சாதனையென்றும் நாளேடுகள் சில பிரசாரம் செய்வதனை கவனித்திருப்பாய் — இந்த ஏடுகள் தமிழ் மக்களை வெறும் முட்டாள்களாக்கிட முயல்கின்றன.

அரசு சில சலுகைகளை வழங்கிட முன்வந்திருப்பது உண்மையானால் கூட — அது தமிழர் கூட்டணியின் தலைமையில் தமிழினம் காட்டிய கடுமையான எதிர்ப்பினால் ஏற்பட்ட அச்சத்தின் காரணமாக தரப்படுபவையே தவிர ஒத்துழைப்புத் தம்பிரான்களின் முயற்சியால் அல்ல என்பதை நாடறியும்!

அதுமட்டுமல்ல நண்பா — நாம் கேட்டிடுவது பிச்சையுமல்ல — சலுகையுமல்ல — அரசியல் சட்டரீதியாக தமிழ் மொழியின் உரிமைகள் வரையறுக்கப்பட வேண்டுமென்பதே தமிழர்களின் ஒருமனதான கோரிக்கையாகும்!

## அரசியல் மேடை

இப்போது அரசு தரப்போவதாகக் கூறப்படும் சலுகைகள் எப்படிப்பட்டதென்றால் — அண்ணன் ஒருவன் தம்பிக்குரிய சொத்துக்களையெல்லாம் தனது வலிமையை உபயோகித்து அடித்துப் பறித்து அவற்றை தனது பெயரில் சட்டரீதியாக எழுதி விட்டு, தம்பியைப் பார்த்து, ''தம்பீ வீடு எனக்குரியதுதான். ஆனாலும் நீ வீட்டில் படுத்தெழும்பலாம் — அதற்கு தடை விதிக்க மாட்டேன்'' என்று கூறிவிட்டு ஊரைக் கூட்டி ''தம்பியை எவ்வளவு அக்கறையுடன் நான் கவனித்துக் கொள்ளுகிறேன்— பார்த்தீர்களா? என்று கேட்பது போன்றதாகும்!

இந்தக்கேடுகெட்ட அண்ணனைப்போலத்தான் தமிழ் மக்களின் அனைத்து உரிமைகளையும் அரசியல் சட்டரீதியாக தட்டிப்பறித்துவிட்டு, சிங்கள அரசு தமிழ் மக்களுக்கு சலுகை வழங்குவதாக இப்போது கண்துடைப்பு நாடகம் ஆடப் பார்க்கிறது! இதில் ஒரு நாளும் ஏமாந்து விடாது அறிவுபடைத்த தமிழினம்!

இந்தநேரத்தில் நண்பா, புதிய அரசியல் சட்டத்துக்கு தமிழர்கள் காட்டுகின்ற எதிர்ப்பை மேலும் வலிவுபடுத்திட நாடாளுமன்றத்தை தமிழர் கூட்டணி பிரதிநிதிகள் முற்றாகப் பகிஷ்கரித்திடவேண்டுமென்ற ஒரு கருத்தும், அப்படிப் பகிஷ்கரித்திடாது நாடாளுமன்றத்தினுள் நுழைந்து உள்ளும் புறமும் புதிய அரசியல் சட்டத்துக்கு எதிராகப் போராடிட வேண்டுமென்ற பிறிதொரு கருத்தும் நாட்டில் பேசப்பட்டு வருவதனை கண்டிருப்பாய்!

நாடாளுமன்றத்தை முற்றாகப் பகிஷ்கரித்திட வேண்டுமென்று கூறுவோர் இரு சாரார்; ஒரு சாரார் தீவிர, துடிப்புமிக்க இளைஞர்களும் மாணவ சமுதாயத்தினரும்! இவர்களது உணர்ச்சி அந்தரங்க சுத்தியானது; எப்படியும் இனவிடுதலையைத் துரிதப் படுத்திட வேண்டுமென்ற தணியாத வேகத்தினால் இப்படிக்கேட்பவர்கள் இவர்கள்!

மற்றோர் சாரார், இளைஞர்களின் இந்த தூய்மையான உணர்ச்சியைப் பயன்படுத்தி, தமிழர் கூட்டணிப் பிரதிநிதிகளை அவர்களது பாராளுமன்ற ஸ்தானங்களிலிருந்து இந்தச் சமயத்தில் எப்படியாவது வெளியேற்றி விட வேண்டும் என்கின்ற திட்டமிட்ட அரசியல் சூழ்ச்சியுடன் இந்தப் பிரச்சினையை பெரிது படுத்தி வருகிறார்கள் — பதவி துறக்காவிட்டால், அது சரணாகதியடைவது போன்றது என்கின்ற ஒரு விஷமத்தனமான கருத்தையும் இளம் உள்ளங்களில் விதைத்திட முயற்சிக்கிறார்கள் — எரிகிற வீட்டில் பிடுங்கியது ஆதாயம் என்பதுதான் இவர்களது கொள்கை! இந்த நோக்குடன்தான் தமிழினத்தின் ஜன்ம விரோதி ஏடான தினபதியும், சிங்கள சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் எடுபிடிகளும் நாடாளுமன்றத்தை தமிழர் கூட்டணியினர் பகிஷ்கரித்திட வேண்டுமென்று ஓலமிட்டு வருகிறார்கள்!

தமிழினத்தின் ஈட்டிமுனைகளாக விளங்கும் இளம் தலைமுறையினரின் எழுச்சிக்கும் உணர்ச்சிக்கும் தலைசாய்க்கும் அதே வேளையில் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்திடும் பிரச்சினையில், உணர்ச்சிக்குமட்டுமன்றி சிந்தனைக்கும் சற்று இடம் கொடுக்கும்படி என் இளம் மாணவ சமுதாயத்தைக் கேட்டிட விழைகிறேன்!

புதிய அரசியல் சாசனத்துக்கு தமிழினம் எவ்வளவு வலிவுடன், மூர்த்தண்யத்துடன் எதிர்ப்புக்காட்டிட முடியுமோ, அவ்வளவு தூரம் எதிர்ப்புக் காட்டிவிட்டது. தமிழினம் புதிய அரசியல் சாசனத்தை கிஞ்சிற்றும் ஏற்றுக்கொள்ளவில்லை — ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லையென்பதை ஐயத்துக்கிடமின்றி, நாட்டுக்கும், நானிலத்துக்கும் எடுத்துக்காட்டி விட்டோம்!

இந்த நிலையில், புதிய அரசியல் சாசனத்தை தமிழினம் ஏற்றுக்கொள்ளவில்லையென்பதை தமிழர் கூட்டணிப் பிரதிநிதிகள் தங்கள் பதவிகளைத் துறந்து இடைத்தேர்தல் ஒன்றில் போட்டியிடுவதன் மூலம்தான் காட்டிடவேண்டும் என்கின்ற இன்றியமையாமை ஏதும் இருப்பதாக நான் கருதிடவில்லை. இடைத்தேர்தல் ஒன்றை உண்டாக்கி, தேர்தலில் வீணாக செலவிடும் நமது சக்தியையும், பணத்தையும், தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்துக்கு ஆக்கபூர்வமான வேறுவழிகளில் செலவிடலாமே!

உண்மையில் தங்கள் பதவிகளை உதறிவிட்டு இடைத்தேர்தலில் போட்டியிட வேண்டியவர்கள் புதிய அரசியல் சாசனத்தை ஆதரித்து கையெழுத்திட்ட தமிழ் பிரதிநிதிகளே தவிர—எதிர்த்தவர்கள் அல்லர். தமிழ் மக்கள் தமது பிரதேசங்களில் தம்மைத்தாமே ஆளக்கூடிய ஓர் அரசியல் சட்டத்தைத்தவிர வேறு எந்த அரசியல் சட்டத்தையும் ஏற்க மாட்டோம் — எதிர்த்துப் போராடுவோம் என்று இன்று நேற்றல்ல—கடந்த 16 ஆண்டுகளாக தமிழ் மக்களிடம் எடுத்துரைத்து அவர்களது ஒப்புதலைப் பெற்றிருப்பவர்கள் தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகள் என்பதை எவருமே மறுத்திட முடியாது!

தமிழ் ஈழத்தின் அனைத்துத் தொகுதிகளிலும் இடைத்தேர்தல் நடக்கும் சூழ்நிலை இருக்குமானால் —தமிழர் கூட்டணி உறுப்பினர்கள் அனைவரும் நிச்சயம் பதவி துறந்து அரசியல் சட்டத்தை ஆதரித்தவர்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# கல்வியமைச்சரின் கண்துடைப்பு!

கல்வியமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் அவர்களுக்கு காலம் கடந்து ஞானோதயம் பிறந்திருக்கிறது.

கல்வியமைச்சருக்கு ஞானோதயம் பிறந்திருக்கிறது என்பதைவிட தமிழ் மாணவர்களின் வலிமையான, உக்கிரமான எதிர்ப்பு அவரது கண்ணைச் சற்றுத் திறக்கவைத்திருக்கிறது என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் ''தரப்படுத்தல்'' என்னும் திட்டத்தின்கீழ் தமிழ் மாணவர்களுக்கு அநியாயம் நடந்ததென்பதை இரண்டு ஆண்டுகள் கழித்து இப்போது தான் கல்வியமைச்சர் ஒப்புக்கொண்டு இருக்கிறார்!

இரண்டு ஆண்டுகளுக்குமுன் தமிழ் மாணவர்களுக்கு இழைக்கப்பட்டது அநீதியென்பதை ஒப்புக்கொள்ள அமைச்சருக்கு இரண்டு ஆண்டு காலம் தேவைப்பட்டதென்றால் — இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் அநியாயங்களை அவர் உணர்வதற்கு மேலும் இரண்டு ஆண்டுகாலம் தேவைப்பட்டாலும் ஆச்சரியமில்லை —

1970ம் ஆண்டு, திறமைப்புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் திட்டம் கைவிடப்பட்டு 'தரப்படுத்தல்' எனும் ஒருபுதிய திட்டம் புகுத்தப்பட்டது!

''தரப்படுத்தல்'' எனும் திட்டம் பச்சையான இன அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டது! பல்கலைக்கழகத்துக்கு தமிழ் மாணவர்கள் பெருந்தொகையாக தெரிந்தெடுக்கப்படுவதை கட்டுப்படுத்துவதற்காகவே கொண்டுவரப்பட்ட அப்பட்டமான இனவெறித் திட்டமாகும் இது!

தகுதியும், திறமையுமிருந்தும் தமிழர்களாகப் பிறந்துவிட்ட ஒரே காரணத்துக்காக ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்களுக்கு உயர்கல்வி மறுக்கப்பட்டது! பல்கலைக்கழக நுழைவுக்கு தமிழ் மாணவர்கள் சிங்களமாணவர்களைவிட அதிக புள்ளிகள் எடுக்கவேண்டும் என்ற இன அடிப்படையிலான வடிகட்டிய வகுப்புவாதக்கொள்கை பின்பற்றப்பட்டது!

இந்த அநியாயத்தை, அக்கிரமத்தை, கொடுமையைக்கண்ட தமிழ்மக்கள் பொங்கியெழுந்தனர். தமிழர் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் கண்டனக்குரல் எழுப்பினர்: தமிழ் மாணவர்களோ அலைகடலெனப் பொங்கியெழுந்து, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாடசாலைகளைப் பகிஷ்கரித்து கண்டன ஊர்வலம் நடத்தி தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர்.

அப்போதெல்லாம் இதே கல்வியமைச்சரும் அரசுடன் ஒட்டியிருக்கும் குமாரசூரியர், தியாகராஜா, வி. பொன்னம்பலம், அருளம்பலம் போன்றவர்களும் என்ன கூறினார்கள்?

'தரப்படுத்தல்' திட்டத்தின்கீழ் தமிழ் மாணவர்களுக்கு எந்தவிதமானபாரபட்சமும் காட்டப்படவில்லை. தமிழரசுக் கட்சியினர்தான் மாணவர்களைத் தவறானவழியில் திருப்பிவிட்டிருக்கிறார்கள். தமிழ் மாணவர்களுக்கு தரப்படுத்தல் திட்டம் நன்மையே செய்திருக்கிறது. அது ஒரு முற்போக்கு சோசலிசத் திட்டம்'' — இப்படியெல்லாம் அடித்து முழக்கினார்கள்!

இவர்களது துரோகத்தனமான கபடத்தனமான பிரசாரங்களை கல்வியமைச்சர் தனது வாயினாலேயே இப்போது அம்பலப்படுத்தி 1970ம் ஆண்டில் தமிழ் மாணவர்களுக்கு துரோகம் இழைக்கப்பட்டதென்பதை ஒப்புக்கொண்டு விட்டார்.

'' 1970ம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் நிலையில் தவிர்க்க முடியாத நிலையில் தரப்படுத்தல் முறை கொண்டுவரப்பட்டது. அது சில பிழையான முறைகளை ஏற்படுத்தியது என்பதை நாம் அறிந்ததால் அதனை அந்த ஆண்டுடனேயே கைவிட்டுவிட்டோம்—''

இவ்வாறாக இப்போது வாய்திறந்து 1970ம் ஆண்டு தாம் பின்பற்றிய தரப்படுத்தல் முறை தவறானது என்பதை கல்வியமைச்சர் இப்போது ஒப்புக்கொண்டுவிட்டார்.

தரப்படுத்தல் திட்டத்தை ஆதரித்தும், 1970ம் ஆண்டு தமிழ் மாணவ சமுதாயம் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை கண்டித்தும் அறிக்கைவிட்டுக்கொண்டிருந்த அரசின் தமிழ் அடியாட்கள் இப்போது என்ன சொல்லப்போகிறார்கள்?

1970ம் ஆண்டுடன் தரப்படுத்தல் முறையைக் கைவிட்டுவிட்டதாக கல்வியமைச்சர் கூறுவது உண்மையானால் அதற்குப்பின்னர், எந்த அடிப்படையில் மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படுகிறார்கள் என்பதை அவர் ஏன் தமது அறிக்கையில் தெளிவுபடுத்தவில்லை?

தரப்படுத்தல் முறையை அரசு கைவிட்டுள்ளது உண்மையானால் — பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் திறமைப்புள்ளிகளின் அடிப்படையில் இன, மொழிப் பாரபட்சமின்றி தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று அரசியல் நிர்ணய சபையிலும்—பல்கலைக்கழக மசோதாமீது நடந்த விவாதத்தின்போது நாடாளுமன்றத்திலும்—தமிழரசுப் பிரதிநிதிகள் கொண்டுவந்த திருத்தங்களையும் தீர்மானங்களையும் கல்வியமைச்சரும் அரசும் ஏற்றுக்கொள்ள மறுத்து அவற்றைத் தோற்கடித்தது ஏன்?

சிங்கள மாணவர்களைவிடத் தமிழ் மாணவர்கள் அதிகமாக பல்கலைக்கழகங்களில் நுழைய வேண்டுமென்பதல்ல நமது கோரிக்கை—பல்கலைக்கழகப் பிரவேசத்திலும் ஏனைய கல்வித்துறையிலும் தமிழர்,சிங்களவர் என்று இன, மொழி அடிப்படையிலான பாரபட்சம் அணுவளவும் காட்டப்படக்கூடாது என்பதே எமது நிலையாகும்!

அந்த நிலை மீண்டும் தோன்று மட்டும் — அதாவது இன, மொழி அடிப்படையிலன்றி—எல்லோருக்கும் ஒரேயளவான திறமைப்புள்ளிகளின் அடிப்படையில் பல்கலைக்கழக நுழைவும், ஏனைய கல்வித்துறை வசதிகளும் அளிக்கப்படும்வரை — கண்துடைப்பு அறிக்கைகளால் தமிழ் மாணவர்களை ஏமாற்றிட முடியாது என்பதை கல்வியமைச்சருக்கு கூறிவைக்க விரும்புகிறோம் —

# தமிழர் கூட்டணி அடுத்து செய்ய வேண்டியவை என்ன?

## செல்லத்தம்பு தரும் நான்கு அம்சத்திட்டம்



தமிழர் கூட்டணியின் அடுத்த செயல் திட்டம் எப்படிப்பட்டதாக அமைய வேண்டும் என்பது குறித்து வவுனியா பா. உ. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு தமது கருத்தை சுதந்திரன் நிருபரிடம் எடுத்து விளக்கினார். அவர் தெரிவித்துள்ள சில கருத்துக்கள் வருமாறு:-

(1) தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள ஒற்றுமையை மேலும் வலுப்படுத்துவதுடன், இந்த ஒற்றுமை தமிழ் பொது மக்களிடையேயும் ஆழமாக வளரச் செய்யத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

(2) தமிழ் பேசும் மக்களை எதிர் நோக்கும் பிரச்சினைகளில் தமிழ்த் தலைவர்களும், தமிழ்ப் பிரதிநிதிகளும் ஒரே குரலில் பேசக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இன்றைய நிலையில் தமிழ் பேசும் மக்களில் பெரும்பான்மையோர் ஒரே குரலில் பேசினாலும், இந்த ஒற்றுமை அணியிலிருந்து பல்வேறு காரணங்களுக்காகவும் சிலர் விலகி நிற்கிறார்கள். இந்த நிலைமை ஒரு முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். ஏனெனில் இதைப் பயன்படுத்தி, தம்மை ஒரு சிலர் ஆதரிப்பதை வைத்துக்கொண்டு தமிழ் மக்களின் ஆதரவு தமக்கேயுண்டு என்று ஆளுங் கட்சியினர் வெளியுலகுக்கு காட்ட முயற்சிக்கிறார்கள்.

(3) நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தாம் எப்படி வாழ்ந்தனரோ அந்த நிலைமைக்கு தமிழ் மக்கள் மீண்டும் திரும்ப வேண்டும். அந்த நேரத்தில் 95 வீதமான தமிழ் பேசும் மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே வாழ்ந்து வந்தனர். சிங்கள மக்களும் தமது பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். புகையிரதப் பாதை போடப்பட்டு ரோட்டுகளும் திருத்தப்பட்ட பின்னர்தான், தொழில், வாணிபம் போன்றவற்றை மனதில் கொண்டு, வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே தமிழ் பேசும் மக்கள் குடியேறமுற்பட்டனர்.

இதன் பின்னர் தான் இரு முக்கிய இனத்தவர்களுக்கு மிடையேயும் வெடிப்பும், போட்டியும் கசப்பும் வளரத் தொடங்கியது.

இப்பொழுது இலங்கை பூரண இறைமையுடைய ஒரு சுதந்திர நாடாகி விட்டது. இரண்டு முக்கிய இனங்களுக்குமிடையே போட்டியும் கசப்புணர்வும் வளரக்கூடிய சந்தர்ப்பங்கள் இனி நீக்கப்படவேண்டும். தமிழர் கூட்டணி இந்த இரண்டு இனத்தவரிடையேயும் உண்மையான நட்பையும் உறவையும் வளர்ப்பதற்கு இதயபூர்வமாகப் பாடுபடவேண்டும்.

இதைச்சிறப்பாகச்செய்து முடிக்க வழியிருக்கவேயிருக்கிறது. கொழும்பைத் தவிர்ந்த (கொழும்பு நாட்டின் தலைநகராக இருப்பதால்) ஏனைய சிங்களப் பிரதேசங்களில் வாணிபத்திலும், வேறு தொழில்களிலும் இப்போது ஈடுபட்டிருக்கும் தமிழ் மக்களை தங்கள் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வந்து குடியேறி அங்கு அத்தொழில்களில் ஈடுபடுமாறு அழைக்க வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதே தொழில்களைச் செய்வதற்கு ஏராளமான வசதி வாய்ப்புண்டு.

இப்படிச்செய்வதன் மூலம், தமிழ்ப்பிரதேசங்களை நாம் அபிவிருத்தி செய்வது மட்டுமன்றி சிங்களப் பிரதேசங்களில் தமிழர்கள் இப்போது ஈடுபட்டுள்ள தொழில் துறைகளில் நமது சிங்களச்சகோதரர்கள் ஈடுபடவும் வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்தவர்களாவோம்.

சிங்களச் சகோதரர்களுடன் போட்டியும் கசப்பும் ஏற்படாமல் சிங்களப்பிரதேசங்களில் தம்மால் தொழில் செய்யமுடியும் என்று கருதும் தமிழர்கள் வேண்டுமானால் இருக்கும் இடங்களிலேயே இருக்கட்டும் —அவர்களை வடக்கு, கிழக்குக்கு வரும்படி நாங்கள் அழைக்கவில்லை.

(4) தமிழர் அரசியற் கட்சிகளிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள ஒற்றுமை, விவாதங்கள், பேச்சு வார்த்தைகள் மூலம், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ்பேசும் இந்து, இஸ்லாமிய மக்களிடையே ஆழமாக வேரூன்றப்பட வேண்டும். தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக இஸ்லாமிய மக்கள் எவ்வளவோ தொண்டுசெய்துள்ளனர். ஏனைய தமிழ் மக்களைப்போலவே தமிழின் மீது பற்றுக் கொண்டவர்கள் இஸ்லாமியத்தமிழர்கள். எனவே அரசியல் ரீதியாகவும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டியங்க முடியாது என்பதற்கு எதுவித காரணமுமில்லை.

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் சட்டமும் தமிழ் மொழியின் நிலையும்!

(புதிய அரசியலமைப்பில் தமிழ் தனக்குரிய இடத்தைப் பெற்றுள்ள தெனச் சிங்கள தோழர் வி. பொன்னம்பலம் சொல்லுகிறர். தமிழர்கள் சட்டங்களை இனித் தமிழில் படிக்கலாம் என்கிறர் "சிங்களச் சித்தர்" சிவானந்தன் "நீதிமன்றங்களில் தமிழில் பேசலாம்" என்கிறர் சிங்கள மனச்சாட்சி மாட்டின்துரை! 'பனி' 'சிமோல்' "சிங்களச் சூரியர்" கும்பல் தமிழுக்கும் "என்னவோ" கிடைத்துவிட்டதென்கிறர்கள். இந்தத் தொடர்கட்டுரை இவர்களின் அடிமைப்புத்தியை அகற்றி மூளைக் கோளாறுகளைத் தீர்க்கத்தக்க முறையில் அமைந்துள்ளது.)

**கா. பொ. இரத்தினம் பா. உ.**

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த புகை வண்டியில் நடந்த நிகழ்ச்சி: கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளையும் நானும் அந்த வண்டியில் பயணம் செய்தோம். எங்களுடன் ஒரு பொறியியலாளரும் பயணஞ் செய்தார். அந்தப் பொறியியலாளர் எங்களைக் கேட்ட ஒரு கேள்வியே இதனை வெளியிடத்தூண்டியது.

''புதிய அரசியலமைப்பை படித்துப் பார்த்தேன். அதில் தமிழ்மொழிச் சட்டமும் தமிழ் மொழிப் பிரமாணங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றைக் குறிப்பிட்டதால் தமிழுக்கு உரிமை கிடைக்கின்றது தானே! நீங்கள் ஏன் இல்லை என்கிறீர்கள்?'' என்று அந்தப் பொறியியலாளர் கூறினர். அவருக்கு உண்மையான நிலைமையை நாங்கள் விளக்கினேம். அவர் சிறிதும் தயங்காமல் ஏற்றுக் கொண்டார்; ஆட்சி செய்வோரின் ஏமாற்று வித்தையையும் உணர்ந்து கொண்டார்.

## வாலறுந்த நரிகள்

எல்லா விடயங்களையும் அறிந்து சீர்தூக்கிப் பார்க்க வாய்ப்பில்லாத பலர் இவரைப்போல எண்ணி ஏமாற்றமடையாமல் உண்மையை அறிந்துகொள்வதற்காகவே இதனை வெளியிடுகின்றேம். அரசாங்கத்தைக் கட்டியணைக்கும் பைத்தியக்காரர் சிலர் சுயநலத்தாலும் அறியாமையாலும் உந்தப்பட்டுப் பிழையான கருத்துக்களைப் பத்திரிகைகள் வாயிலாகப்பரப்ப அல்லும் பகலும் அயராமல் முயல்கின்றனர். நாங்கள்கூறுபவற்றை வெளியிடுதற்கு அஞ்சும் பத்திரிகைகள் வாலறுந்த நரியைப்போல நடிக்கும் இவர்களின் கருத்துக்களை வெளியிட்டு அரசாங்கத்திடம் நல்ல பெயர் பெறுவதற்குப் போட்டி போடுகின்றன.

## உயிர்போன சட்டம்

குழந்தை பிறக்கும் பொழுதே முடமாக நோயுற்று நலிந்து பிறந்தது; உயிரடங்கிக்கிடந்தது; இந்தக் குழந்தை நோய் நீங்கி எழுந்து நடமாடித்திரியாது என்று மக்கள் கூறினர்கள். சிலர் தப்பிப்பிழைக்கலாம் என்ருர்கள். அதன் நோயைத் தீர்த்து இயங்கச் செய்தற்குரிய மருந்தைக் கொடுப்பதில்லை என்னும் முடிவு செய்தால் அந்தக் குழந்தை உயிர்த்து எழுந்து நடமாடுமா? உயிர் போன உடலாகத்தானே காட்சிதரும்.

**இந்த உயிர்போன சட்டம் தான் 1958இல் நிறைவேற்றப்பட்ட 28ஆம் இலக்க தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள் சட்டம்.)**

இந்த வலுவற்ற சட்டத்தால் பயன் விளையாது, தமிழ் உரிமை கிடையாது என்று கூறித் தமிழ் அரசுக் கட்சி அன்றும் போராடியது; இன்றும் போராடுகிறது. இந்தச் சட்டத்தை நிறைவேற்றிய பிரதம அமைச்சர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கா சிங்களம் மட்டும் சட்டத்திற்குத் தேவையான திருத்தங்களை ஆராய்தற்குத் தாம் ஆயத்தம் எனவும் பாராளுமன்றத்தில் 14/6/56 இல் கூறினர். ஆனல் இப்பொழுது புதிய அரசியலமைப்பில் சிங்களம் மட்டும் சட்டம் புகுத்தப்பட்டுள்ளது. மூன்றில் இரண்டுக்கு மேற்பட்ட தொகையினரான பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தால் மட்டுமே — அதாவது 157 பாராளுமன்ற உறுப்பினர்களில் 105 பேருக்கு மேற்பட்டோர் வாக்களித்தால் மட்டுமே—இனி இந்தச் சிங்களம் மட்டுஞ் சட்டத்தைத் திருத்த முடியும்.

அரசியலமைப்பில் சேர்க்கப்படமுன் இச்சட்டம் ஒரு சாதாரண சட்டம். ஆளும் கட்சியினர் எதிர்கட்சியினரிலும் ஒரு வாக்குக் கூடுதலாகப் பெற்ருலும் இந்தச் சட்டத்தை மாற்றலாம். இந்த இலகுவான நிலைமை இன்று மாற்றப்பட்டு இலகுவில் மாற்றமுடியாமல் இச்சட்டம் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதை இயக்குதற்குப் பிரமாணங்கள் தேவையில்லை.

## தமிழ்மொழிப் பிரமாணங்கள்

உயிரடங்கின உடலாயிருக்கும் தமிழ்மொழிச் சட்டமோ பிரமாணங்கள் இல்லாமல் இயக்க முடியாத சட்டம். இச்சட்டத்தை 1958 இல் நிறைவேற்றிய பின் இரண்டு ஆண்டுகள் கழித்து இதனை நடைமுறைப்படுத்துதற்கு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கம் சில பிரமாணங்களை 14-12-1960இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் சிலரும் செய்த சூழ்ச்சியால் இப்பிரமாணங்கள் நிறைவேற்றப்படாமல் மீட்கப்பட்டன.

இதனல் 1966ஆம் ஆண்டு வரையும் எட்டாண்டுகளாகச் இந்த தமிழ்மொழிச் சட்டம் உயிரடங்கிய பிணமாகவே கிடந்தது. 1965ல் ஐக்கிய தேசியக் கட்சி எங்கள் தமிழ் அரசுக் கட்சியுடன் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி 1966 சனவரி 8ஆம் திகதி இச்சட்டத்தின் கீழ் தமிழ்மொழிப் பிரமாணங்களை நிறைவேற்றியது. இந்தப் பிரமாணங்களை நிறைவேற்ருமல் தடுப்பதற்கு இப்பொழுது ஆளும் கட்சியிலுள்ள முக்கூட்டுக் கட்சிகளும் பெருங் கிளர்ச்சி செய்தன; இந்தக் கிளர்ச்சியில் ஒரு புத்தபிக்குவும் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

முக்கூட்டுக் கட்சிகள் ஆட்சிக்கு வந்தவுடன் இரத்தின சாரதேரோ எனும் பெயருடைய இந்தப் பிக்குவுக்கு அவர் இறந்த இடத்தில் நினைவுத்தூண் நிறுவி விழா எடுத்தன. இந்த நினைவு விழா தமிழ் மொழிக்குக் கொடுக்கப்பட்ட அரைகுறை உரிமையையும் முழு மூச்சுடன் எதிர்க்கும் விழாவாக அமைந்தது. ஆட்சிக்கு வந்த பின்னர் கூடத் தமிழ் மொழிக்கு எவ்வித உரிமையையும்கொடுக்கும்எண்ணம் இவர்களிடம் இல்லை என்பதை நாடறியச் செய்து இவர்களுடைய முகமூடியைக்கிழித்தெறிய எண்ணிய திரு. டட்லி சேனநாயக்கா தமது அரசாங்கம் 1966ல் நிறைவேற்றிய தமிழ்மொழிப் பிரமாணங்களை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் முக்கூட்டு அரசாங்கம் நடைமுறைப்படுத்துமா என்று ஒரு கேள்வியை அரசாங்கத்திடம் கேட்டார்.

## மூன்றும் இரண்டும்

இந்தக் கேள்விக்குப் பாராளுமன்றத்தில் 6-3-71 இல் அரசாங்கச் சார்பில் விடைகூறிய அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நடைமுறைப் படுத்தமாட்டோம் என்று மூன்று நிமிடத்துள் மூன்று முறையும் இதுதான் தங்கள் அரசாங்கத்தின் கொள்கை என்று

(8-ம் பக்கம் பார்க்க)

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்



நல்ல உடல் இருந்தால்தான்
வாழ்க்கையை இனிது அனுபவிக்கலாம்.
இழந்த சக்தியை மீட்டுத்தந்து மீண்டும் இளமைப் பூரிப்பை
அளிக்கவல்ல அற்புதமானதோரு அபூர்வ சஞ்சீவி
மதன சஞ்சீவி லேகியம்

மதனலேபனம்

சித்த மருத்துவ பண்டிட் — கா.சிவசுப்பிரமணியம் M.I.H.S.M.P
முருகானந்தா வைத்தியசாலை
104. செட்டியார் தெரு
கொழும்பு—11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பேரவைக்குச் செல்வதா? பகிஷ்கரிப்பதா?

புதிய அரசியல் சட்டத்தின் கீழ் உருவான தேசிய அரச பேரவைக்கு தமிழர் கூட்டணியைச் சேர்ந்த பா. உ. க்கள் செல்வதா அல்லது பகிஷ்கரிப்பதா? இதுசம்பந்தமாக தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு இன்று (25-6-72) யாழ் நகரில் கூடி முடிவு எடுக்கிறது. இதுசம்பந்தமாக சுதந்திரன் வாசகர்கள் சிலர் எழுதியிருந்த கருத்துக்களை இங்கு தருகிறோம்.

—ஆசிரியர்

## பகிஷ்கரிப்பு ஆபத்தானது!

தமிழரசு பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய பேரவையை நிராகரித்து தங்கள் பாராளுமன்ற பதவிகளை ராஜினுமா செய்ய வேண்டுமென்றும், அதுதான் உண்மை விடுதலைப் பற்றென்றும், எச்சில் இலை நக்கி தினபதியும், விடுதலை போன்ற பத்திரிகைகளும் சமீப காலமாக மிகவும் தீவிரமாக நயவஞ்சகபுத்தியுடன் எழுதி வருகின்றன. இவற்றின் உண்மை நோக்கம் என்ன? தமிழ் மக்கள் மத்தியில் நாளுக்கு நாள் செல்வாக்கு பெற்றுவரும் தமிழரசு பாராளுமன்ற உறுப்பினர்களை எப்படியும் ராஜினுமா செய்யப்பண்ணி அதன் மூலம் அவர்களை அரசியல் அனுதைகளாக்கி தமிழ் மக்கள் மத்தியிலிருந்து செல்லாக் காசாக்க பார்க்கிறார்கள். இதுதான் உண்மை.

தேசிய பேரவையை தமிழரசார் மட்டும் நிராகரித்து பதவிகளை துறப்பதால் என்ன பயன்? இவர்களுடன் ஏனைய வட கிழக்கு தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து ராஜினுமா செய்தால்தான் அதனுல் ஏதோ ஒரு வகையில் நிச்சயம் பயன் ஏற்பட்டே தீரும். ஆனுல் இதற்கு இந்த பச்சைத் தமிழ் துரோகிகள் சம்மதிப்பார்களா? அங்கொடையில் இருக்க வேண்டியவர்களையும் தமிழ் மக்கள் பாராளுமன்றத்துக்கு அனுப்பினுல் எப்படி அதைவிட்டு விட்டுவர மனம் இருக்கும் இவர்களுக்கு? இவர்களை — இந்த கோமாளிகளை அங்கே விட்டு விட்டு தமிழரசாரை மட்டும் ராஜினுமா செய்ய சொல்வதனுல் தமிழ் பேசும் மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை. இது தலை இருக்க வாலைப் பிடிப்பது போன்ற ஒரு செயலாகும்.

அடுத்து இன்று அவசர காலச்சட்டம் அமுலில் உள்ளது. அரசாங்கம் போகிற போக்கை பார்த்தால் நாளை என்ன நடக்குமோ என்று சொல்லத்தெரியாது. புத்தளம் போன்ற தொகுதிகளுக்கு இன்னும் இடைத்தேர்தலே நடைபெறவில்லை. யாரும் இந்த அனுதைகளைப் பற்றி அக்கறை காட்டுவதாகவும் தெரியவில்லை. இப்படியான இந்த சந்தர்ப்பத்தில் தமிழரசார் ராஜினுமா செய்தால் அவர்களை நசுக்குவதற்கு அரசாங்கத்துக்கு நல்ல வாய்ப்பாக போய்விடும்.

பின்னர் எங்கள் பிரதிநிதிகளாக சண்டியன் விசுவநாதன் வீ. பொன்னம்பலம் போன்ற எட்டப்பர்களை இந்த தொகுதிகளின் பிரதிநிதிகளாக அரசாங்கம் நியமித்தாலும் நியமிக்கும்; ஏனெனில் அரசாங்கத்தின் போக்கு அப்படி. யாரும் தட்டிக்கேட்க முடியாது. அப்படி கேட்டால் உடனே அடுத்த நாள் பொலிசும், சி. ஐ. டி. களும் ஒருபெரிய கொள்ளைக் காரனைப் பிடிக்க வருவதுபோல் வீட்டுக்கே படையெடுத்து வந்துவிடும்.

என்னே வீரம்? பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும் இப்படிப்பட்ட வீரர்களை நாம் பார்க்கவே முடியாது. இது தலைவலி போய் திருகுவலி வந்தது போல்தான் இருக்கும். இந்த நிலை நமக்கு வேண்டுமா?

—வி. ஆர். லிங்கம்.

## சில கருத்துக்கள்

### வாலிபர்களே சிந்தியுங்கள்!

விடுதலை உணர்ச்சியால் உந்தப்பட்டு இன மொழி உரிமை பெற வீறுகொண்டு எழுந்து நிற்கும் வாலிப நண்பர்களே எமது செயலால் என்ன நடக்கும் என்பதை நாம் நன்கு ஆராய்ந்து செயல்பட வேண்டிய நிலையில் இன்று இருக்கின்றோம்.

தெரிவு செய்யப் பெற்ற நான்கு தமிழ்ப் பிரதிநிதிகளைத் தன் பக்கம் வைத்துக் கொண்டு தமிழ் பேசும் இனத்தை ஆட்டிப்படைக்கும் அரசாங்கம், தெரிவு செய்யப்படும் அத்தனை தமிழ் பிரதிநிதிகளும் ஆமாம் சாமிபோட்டு அண்டிப் பிழைப்பவர்களாய் இருந்து விட்டால் எம் இன மொழி மத விடயத்தில் இன்னும் எத்தனை மோசம் செய்யுமோ யார் அறிவார்.

இன்று உணர்ச்சி மிக்க தமிழ் பிரதிநிதிகள் சிலரது குரலாவது அரசவையில் எம் இன மொழி உரிமைக்காக குரல் கொடுக்க முடிகிறது.

அவர்களும் பகிஷ்கரித்து வெளியேறி உபதேர்தல் நடந்தால் அந்த உபதேர்தலில் துரையப்பாவும் வீ. பொன்னம்பலமும் பருத்தித்துறை நடராசாவும் இவர்களைப் போன்றவர்களும் தெரிவு செய்யப்பட்டால் எம் இனத்திற்காகக் குரல் கொடுக்க அரசவையில் யார் இருக்கப் போகிறார்கள்.

அப்படி ஒரு உபதேர்தல் நடந்தால் தனது கையாட்களே தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதற்காக ஆளும் முக்கூட்டணியினரே முன்வந்து தம் பணத்தைத் தானும் செலவு செய்து தமக்கு ஆமாம் போடும் ஆசாமிகளை அரசவைக்கு அழைத்துச் செல்ல பின் நிற்பார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்.

இன்று நமக்காக குரல் கொடுக்கும் இப்பிரதிநிதிகளில் நாலு ஐந்தை நாம் இழந்து விட்டால் எமது நிலை என்ன. இப்பொழுதாவது வெளியே போராட்டத்தையும் அரசவையிலே உரிமைக் குரலையும் காணவும் கேட்கவும் முடிகிறது.

அது மாத்திரம் அல்ல நாம் நாலு ஐந்தை இழந்து விட்டால் தனது ஆட்சியைத்தான் பொதுமக்கள் விரும்புகிறார்கள் என்று அரசாங்கம் கூப்பாடு போடும்.

சரி நாம் உபதேர்தலையும் பகிஷ்கரிப்போம் என்றால் அரசவையில் கதிரைகளைப் பிடிக்க துடியாய் துடிக்கும் ஆளுங்கட்சியின் அடிவருடிகளை எப்படித் தடை செய்வது.

எனவே உணர்ச்சி மிக்க வாலிப நண்பர்களே போராட்டத்தில் நம் தலைவர்கட்கு நாம் உறுதுணையாய் நிற்போம். அதே நேரத்தில் அரசவையில் எம் இனத்தின் குரல்கொடுக்க அவர்களை அனுமதிப்போம்.

—பி. மார்க்குப்பிள்ளை.

## பகிஷ்கரிக்கக் கூடாது ஏன்?

கீழ்க்காணும் காரணங்களுக்காக புதிய தேசிய அரசப்பேரவையை தமிழர் கூட்டணி பிரதிநிதிகள் பகிஷ்கரிக்காது தொடர்ந்தும் அதில் அங்கத்துவம் வகிப்பதுடன் விடுதலைப்போராட்டத்தையும் நடத்த வேண்டுமென மூதூர் தொகுதி சம்பூர் தமிழரசு வாலிப முன்னணிக்கிளை கூட்டணி நடவடிக்கைக் குழுவிடம் கோரியுள்ளது.

1. தமிழ்பேசும் மக்களிடையே போதிய ஒற்றுமை இருந்தும் தமிழ்த்தொகுதிகளிலிருந்து ஒருவர் கூட தேர்தலில் போட்டியிட முன்வராதுபுறக்கணிக்க முன்வருவார்களே யானுல் தேசீய சபையைப் பகிஷ்கரிப்பது சிறந்ததாக இருக்கலாம். ஆனுல் இன்றைய நிலையில் கூட்டணிப்பிரதிநிதிகள் சபையைப் பகிஷ்கரித்தாலும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆறு தமிழ்ப் பிரதிநிதிகள் அங்கு இருக்கத்தான் செய்வார்கள்.

2. தேசீய சபையை எமது இன விடுதலைப் போராட்டத்தை அறிவிக்கும் கருவியாகப் பயன் படுத்தி எமது போராட்டத்தை சபைக்கு வெளியே நடாத்துதல் சிறந்ததாகும்.

3. விடுதலைப்போராட்டத்தின்போது எமது பிரதிநிதிகளும் பங்கு பற்றி அவர்கள் மீதும் பலாத்காரம், அடக்குமுறை பாவிக்கப் பட்டால் உலக நாடுகளின் கவனம் எம்மீது படிவதற்கு அது ஒரு கருவியாக இருக்கும்.

4. குடியரசுக்கு விசுவாசம் தெரிவித்து இப்போது சத்தியப் பிரமாணம் செய்யாவிட்டால் பின்பு இடைத்தேர்தல்கள் நடந்து சத்தியப் பிரமாணம் செய்து தானே சபையில் பங்கு பற்றவேண்டும்? அவ்வாறு சபைக்குச் செல்லாமல் பகிஷ்கரித்து, தேர்தலில் மட்டும் ஈடுபடுவது, மக்களின் சக்திகள் விரயம் செய்யப் படுவதற்கு வழிவகுக்குமே தவிர போராட்டத்திற்கு பயனுள்ளதாக அமையமாட்டாது. அப்படியானுல் எமது இயக்கம், தேர்தல் இயக்கமாக இருக்குமே தவிர ஒரு விடுதலை இயக்கமாக இருக்க மாட்டாது.

5. இலங்கையில் சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு கடந்த 25 வருடங்களாக இயங்கிவரும் நாடாளுமன்றத்தில் எமது பிரதிநிதிகள் சத்தியப்பிரமாணம் செய்து அங்கம் வகித்து வந்திருக்கிறார்கள், அதன் மூலம் சோல்பரி அரசியல் திட்டத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்பது பொருளாக மாட்டாது.

6. எமது மூதூர் தொகுதியைப் பொறுத்தளவில் இது ஒரு இரட்டை அங்கத்தவர் தொகுதியாகும். அத்தொடு இங்கு தமிழ் மக்களைப்பார்க்கிலும் முஸ்லிம் சமூகத்தினர்கள் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். இதனுல் எம்மினத்தவர்களைப்பார்க்கிலும் மற்றைய இன மக்கள் கூடுதலாக இருப்பதால் இத்தொகுதியில் மீண்டும் இடைத்தேர்தல் நிகழ்ந்தால், அதில் எமது பிரதிநிதி வெற்றியடையக்கூடிய வாய்ப்பு நிச்சயமாக இல்லாமல் போகின்றது.

## தந்தை சொல்லை ஏற்போம்!

ஈழத் தமிழினத்தின் எதிர்காலம் நிர்ணயிக்கவேண்டிய இக்கட்டான நேரத்தில் எனது நிலையையும் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

அண்ணன் தருமர் அவர்கள் நாளாந்தப் பத்திரிகையில் வெளியிட்ட அறிக்கையையும், 4-6-72ல் வெளியான சுதந்திரனில் உள்ள எண்ணத்தையும் கண்ணுற்றேன், எம்முன் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைக்கும், முடவனுக்கும் எருதுக்கும் நீதி வழங்க வேண்டிய நிலையிலும் எமதுகூட்டணி உள்ளது என்பதையும் நன்கு அறிகிறேன். ஆயினும் முதற்கண் ‘தந்தை சொல் மிக்க மந்திரமில்லை’ என்ற வாக்குக்கிணங்க தந்தை செல்வாவின் வாக்கை சிரமேற்கொள்ள என்றும் தயாராக உள்ளேன் என உறுதி தந்து எனது எண்ணத்தைக் கூற விளைகிறேன்.

அதாவது, தேசிய பேரவைக்குப் போவதா அன்றேல் பகிஸ்கரிப்பதா என்பதே.

தேசிய பேரவைக்குப் போகாவிட்டால், சத்தியப் பிரமாணம் எடுக்காவிட்டால், எமது அங்கத்துவங்கள் பறிபோகும், போனுல் மறு தேர்தல்கள் நடைபெறும். நடைபெற்றால் ஒரு சில தொகுதிகள் பறிபோகும், அப்போது சந்தர்ப்பவாதிகள் நுழையவாய்ப்பாகும் என அஞ்சப்படுகிறது.

ஒரு சில எட்டப்பரையும், காக்கை வன்னியரையும் கொண்டது எமது தமிழினம் என்றாலும், ஒரு புறுவின் உயிர்காக தன் தசை கொடுத்த சோழனையும், தன் கணவன் நீதி தவறிக் கொல்லப்பட்டான் என்பதற்காக மதுரைமாநகரையே தீக்கிரையாக்கிய கண்ணகியையும், தன் இனம் போரில் பின்வாங்குகிறது என்பதைக் கேள்வியுற்று தன் ஒரே மகனைவாளோடு போருக்கனுப்பி இறப்பினும் புறமுதுகு காட்டாதே எனக் கூறியனுப்பிய வீரத்தாயையும் கொண்ட ‘கல்தோன்றி மண்தோன்றாக் காலம் வாளோடு முன் தோன்றி மூத்த குடி எம் தமிழர் குடி’ தவறு செய்யும் என்று எண்ணுவது தவறு.

எம்மினத்தின் உணர்ச்சியில்மிளிர்ந்த ஒற்றுமையை சென்ற 22 உணர்த்தியது யாவரும் அறிந்ததே. எனவே வடக்கில் ஒரு எட்டப்பனும் வரமுடியாது, வருவதானுல் இளைஞர் இயக்கத்தின் மரண ஊர்வலத்தின் பின்பேயன்றி முன்பல்ல என உறுதிதருகிறேன்.

—வாயாடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கீதத்தை எதிர்த்து மாணவர்கள் கிளர்ச்சி!

கடந்த 17-6-72ல் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடந்த விளையாட்டுப்போட்டியின் முடிவில் சில கீழ் வகுப்பு மாணவிகளைக்கொண்டு தேசிய கீதம் பாடுவிக்கப்பட்ட போது, மாணவர்களும் இளைஞர்களும் அதை எதிர்த்துக் கூச்சலிட்டனர். அதைப் பொருட்படுத்தாது தொடர்ந்தும் பாடுவித்தபோது அங்கு குழுமியிருந்தவர்கள் காதுகளுக்கு எட்டா வண்ணம் ஒலி பெருக்கியின் 'வயரைத்' துண்டித்தனர். ஐயோ! இந்த கீதம் எமக்கு வேண்டாம் நிறுத்துங்கள்! அன்னைத் தமிழை அடகு வையாதீர்கள்! மானமுள்ள மறத் தமிழர் கூட்டமே! இதைப் பகிஷ்கரித்து கலைந்து செல்லுங்கள் எனக் கூச்சல் போட்டனர்.

உடனே அங்கு நின்ற அனைவரும் 'தமிழ்த் தாயின் மானம் காத்து விட்டனர் எமது தவப் புதல்வர்கள்! வாழ்க அவர்கள்!' என வாழ்த்தியபடியே கலைந்து சென்றனர்.

எதிர்பாராத வண்ணம் நடைபெற்ற இக்கிளர்ச்சியை கண்டு ஆட்சியாளருக்கு ஆலவட்டம் போடும் மானங்கெட்ட ஒரு சில ஆசிரியர்கள் திகைத்ததோடு வெட்கித் தலை குனிந்தனர்.

---

## ஆட்சியாளரின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது!

இத்திட்டத்தில் பின்வரும் அம்சங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

(1) தமிழர் கூட்டணியில் இணைந்திருக்கும் கட்சிகளை உடனடியாக தடை செய்வதில்லை. அதே நேரத்தில் தமிழர் கூட்டணியின் ஈட்டி முனைகளாக விளங்கும் இளந் தலைவர்களை ஒவ்வொருவராக கைது செய்து தடுப்புக் காவலில் வைப்பது. இவர்களையும் ஒருமித்து கைது செய்யாமல் படிப்படியாக ஒவ்வொருவராக கைது செய்து சிறைக்குள் தள்ளுவது. இத்திட்டத்தின் முதல் படியாகவே கவிஞர் காசி ஆனந்தன் கைது செய்யப்பட்டிருக்கலாமென்றும் சொல்லப்படுகிறது.

இப்படிச் செய்வதன் மூலம் இளைஞர்களினதும், மாணவர்களினதும், எழுச்சியை நசுக்கிவிடலாமென்று கருதப்படுகிறதாம்.

(2) தமிழினத்தின் உரிமைக்கிளர்ச்சியை ஆதரித்து எழுதிவரும் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டுப் போடுவது.

(3) இதே நேரத்தில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்களிலும் நிர்வாகத்திலும் தமிழை உபயோகிக்கும்படி கண்துடைப்பு சுற்றறிக்கைகளை விடுத்து தமிழ் மக்களின் உணர்ச்சியை மட்டம் தட்டுவதுடன் அரசு தமிழர்களுக்கு சகல உரிமைகளையும் வழங்கிவிட்டதாக நாளேடுகள் மூலம் திட்டமிட்ட பொய்ப் பிரச்சாரத்தை நடத்துவது.

# மகாஜனாவின் எதிர்காலம்??

மகாஜனக் கல்லூரி அதிபர், பெற்றோரினதும், மாணவரினதும் வேண்டுகோளிற்கிணங்க கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். மகாஜனக் கல்லூரியிலுள்ள சுதந்திரக்கட்சி அமைப்பாளரான ஆசிரியரின் தாளத்திற்கு ஆடமுற்பட்டு பல முறை மாணவர்களின் எதிர்ப்பினால் மட்டம் தட்டப்பட்டவர் இவர். இவ்வதிபர் குடியரசு மலரிற்கு வாழ்த்து அனுப்பியவரென்பதும் இதனாலேயே மாணவரிடையே எதிர்ப்பு உருவாகி இவ்விடமாற்றம் ஏற்பட்டது.

இதே சமயம் சுதந்திரக் கட்சி அமைப்பாளரான ஆசிரியரும் மாணவரின் எதிர்ப்பிற்கு அடிபணிந்து பாடசாலையில் தான் தாங்கிய ''கட்டுப்பாட்டு பொறுப்பு ஆசிரியர்'' போன்ற பதவிகளையும் ராஜினாமாச் செய்துள்ளார். இதனால் மகாஜனாவிற்கு நல்ல எதிர்காலமிருப்பதாக மக்கள் உணர்கிறார்கள்.

பழையஅதிபர்தனிப்பட்ட முறையில் நல்லவராயிருந்த போதிலும் குறிப்பிட்ட நீலச்சட்டை ஆசிரியருடன் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாலேயே இப்படியான அவமானங்கட்குட்பட நேரிட்டது என்றும் புதிய அதிபர் திரு. குமாரசாமி அரசியலாட்டங்கட்கு பாடசாலையில் இடங்கொடுக்காது நீலச்சட்டை ஆசிரியரின் சொற்குட்பட்டு ஆடாது, செயலாற்ற வேண்டுமென பெற்றோரும் மாணவர்களும் விரும்புகிறார்கள்.

—"செந்தி"

---

## சிங்களத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும் 11 (i) விதிகளுக்கமைய சிங்களத்தில் மொழிபெயர்த்துவிடலாம்.

11 ( ) விதிகளை (சிங்களத்தில் பதிவுகளை வைக்கும்) நடைமுறைப்படுத்த உங்களுக்கு என்னென்ன வசதிகள் தேவை என்பதை நீதியமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கவும்.''

---

## தமிழர் கூட்டணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்லாமிய மக்களையும் நம்முடன் இணைத்துக் கொள்ளவேண்டும்.

**இறுதியாக ஒன்று. புதிய அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் எத்தனை ஆண்டுகளானாலும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக எந்த ஒரு அரசும் அவர்களை ஆளவும் முடியாது. இது நிச்சயம்!**

---

இப்படிச் செய்வதன் மூலம், தமிழ் மக்களின் மனத்தைக் குழப்பி, அரசியல் சட்டரீதியாக தமிழுக்கு உரிமை கோரி நடக்கும் கிளர்ச்சியை மட்டம் தட்டிவிடலாம் என்று அரசு மனப்பால் குடிக்கிறதாம்.

# தமிழர் கூட்டணியின் முடிவுக்குக் கட்டுப்படுவோம்!

## தமிழர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத் திட்டங்களை நடவடிக்கைக் குழுவுக்கு பல பிரமுகர்கள் சமர்ப்பித்துள்ளனர். இவைகள் அனைத்தையும் அலசி ஆராய்ந்து கூட்டணி தனது செயல் திட்டத்தை உருவாக்கவிருக்கிறது.

மே 24ம் திகதி யாழ் நகரில் கூடிய தமிழர் கூட்டணியில் எடுக்கப்பட்ட முடிவினைத் தொடர்ந்து, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்கள் தோறும் தமிழர் கூட்டணித் தலைவர்கள் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தி மக்கள் கருத்தை அறிந்துள்ளனர். இக்கருத்துக்கள் இன்றைய கூட்டணி நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

### தமிழரசுப் பொதுச் சபை

தமிழரசுக் கட்சியின் பொதுச் சபையின் மிக முக்கியத்துவம் வாய்ந்த கூட்டமொன்றும் 24-6-72 பிற்பகல் 2 மணிக்கு யாழ் நகரிலுள்ள கட்சிப் பணிமனையில் கூடுகிறது.

இன்றைய அரசியல் நிலை, தமிழர் கூட்டணி நடவடிக்கை, பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர் திணிப்பு, பாடசாலைகளில் தேசியக் கொடி வணக்கமும் தேசிய கீதமும், போன்ற பல விடயங்கள் பொதுச் சபையில் விவாதிக்கப்படவுள்ளன.

---

## கல்வியமைச்சர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாலைகளைப் பகிஷ்கரித்ததும் தெரிந்ததே.

தமிழ் மாணவர்களின் இந்த உணர்ச்சியைப் புரிந்துகொள்ளாமல், பாடசாலைகளில் ஒவ்வொரு வாரமும் தேசியக்கொடி ஏற்றப்பட்டு, தேசியகீதம் பாடப்படவேண்டும் என்ற கட்டளையை விடுத்தார்.

இப்படி தேசியக்கொடியும் தேசிய கீதமும் திணிக்கப்பட்டால், தமிழ்ப்பாடசாலைகள் போர்க்களமாக மாறும் என்று தமிழ் மாணவர்களும், தமிழர் கூட்டணித் தலைவர்களும் எச்சரிக்கை விடுத்தனர்.

இதைத் தொடர்ந்து, போதியளவு தேசியக்கொடி இல்லை என்ற நொண்டிச் சாட்டுடன் தமது உத்தரவை வாபஸ்பெற்று, வெற்றிகரமாகப் பின்வாங்கிக் கொண்டிருக்கிறார் கல்வியமைச்சர்.

கல்வியமைச்சர் என்ன காரணம் கூறினாலும், தமிழ் மாணவர்களின் கொதிப்பை இப்போதாவது அவர் உணர்ந்து கொண்டு புத்திசாலித்தனமாக தமது உத்தரவை வாபஸ் பெற்றது பாராட்டப்பட வேண்டிய செயல் என்று தமிழர் கூட்டணி பிரமுகர் ஒருவர் கூறினார்.

இன்று தமிழர் மத்தியிலே தமிழர் கூட்டணிப் பா. உக்கள் தேசிய அரசப் பேரவையைப் பகிஷ்கரிக்க வேண்டுமா? வேண்டாமா என்பது பெரும் பிரச்சினையாயுள்ளது. தமிழர் கூட்டணியினரை தேசிய அரசப் பேரவைக்குச் செல்லுமாறு ஒரு சாரார் வற்புறுத்துகின்றார்கள். அவர்கள் கூறும் காரணங்களையும் சிந்திப்பது மிகவும் அவசியம். அதே போல் தேசியப்பேரவையைப் புறக்கணிக்கும்படி கோருவோரில் இன எழுச்சியும், மொழி உணர்ச்சியும் உடையவர்களின் கருத்தையும் செவிமடுப்பது அவசியம்,

மூன்றாவதாக மாற்றாரின்-எதிரிகளின் — புணர்ச்சியால் உந்தப்பட்ட — பணத்திற்காக, பதவிக்காக, பட்டங்களுக்காக ஆட்சியாளரின் அடிவருடி மானத்தை இழந்து பல்லிளித்து நிற்கும் ஒரு சிலரும் தமிழ்ப் பா. உக்கள் தேசியப் பேரவையைப் புறக்கணிக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

மூன்றாவதாகக்குறிப்பிடப்பட்டவர்கள் (இவர்களைச் சிங்களவர்கள் ''விசிஅட்டய் ஸ்ரீ'' என்பார்கள். கூட்டணி பதவிக்கு வந்தவுடன் பட்டம், பதவி பணத்திற்காக ஆட்சியாளரிடம் சோரம் போனவர்கள் என்பது இதன் பொருள்) மாற்றாரின் எடுபிடிகள் தமிழினத்தின் ஒற்றுமையைச் சிதைத்து, சின்னாபின்னப்படுத்திச் சீரழிக்கத் திட்டமிடும் ஆட்சியாளரின் கைக்கூலிகள். இவர்கள் விடயத்தில் தமிழ் இனம் மிகவும் விழிப்பாயிருக்க வேண்டும். பிரசாரம் செய்ய பத்திரிகை வசதிகளிருப்பதால் ஏதேதோ எழுதித் தள்ளுகிறார்கள் தமிழினத்தைச் சிதைத்திட.

ஆம், தினபதியில் தமிழருக்காகத்—தமிழரின் நன்மைக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் அடிவருடிகள் தமது சகோதர ஏடுகளான சன், தவச, சவச போன்றவற்றில் தமிழருக்கெதிராகச் சிங்கள மக்களைத்தூண்டி விட்டு வேடிக்கை பார்ப்பதையும், தமிழரைக் கள்ளத்தோணிகளென்றும், கடத்தல் காரர்களென்றும், தேசத் துரோகிகளென்றும், சுரண்டி வாழும் எத்தர்களென்றும் பக்கம் பக்கமாக எழுதியதைத் தமிழினம் மறந்து விடமாட்டாது. தமிழரைக் கேவலப்படுத்தும் குணசேன நிறுவனத்தின் பத்திரிகைகளில் தினபதியும், சிந்தாமணியும்

எவ்வாறு தமிழருக்காக—தமிழரின் தன்மைக்காக வழிகாட்ட முடியும். எடுபிடிகளினதும், கைகூலிகளினதும் பிரசாரத்தால் நமது இளைஞர் சமுதாயம் தறிகெட்டு, நெறிகெட்டு, சிதைத்து சீரழியக் கூடாது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ''எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே'' என்று எடுத்துக் கூறினார். இன்று தமிழர் கூட்டணியில் தமிழர்கள் ஒன்றாகிவிட்டனர். நாம் ஒன்றுபட்டதே நமது எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் முதற்படி. இதைக் கண்டு பதைபதைக்கும் ஏகாதிபத்திய அடிவருடிகளின் புலம்பலால் நாம் எமது பாதையிலிருந்து விலகக்கூடாது.

தமிழர் கூட்டணி தமிழ் பா. உ.க்கள் தேசிய அரசப் பேரவையைப் புறக்கணிக்கத் தீர்மானித்தால் அதை ஏற்றுக்கொள்ள முழுமனதுடன் முன்வரும் தமிழர்கள்—குறிப்பாக இளைஞர்கள்—கூட்டணியினர் தேசியப் பேரவைக்குச் செல்லத் தீர்மானித்தால் அதையும் முழுமனதுடன் ஆதரிக்க வேண்டும்.

தமிழர் கூட்டணியைச் சிதைப்பதோ, போலி வரட்டுவாதம் பேசுவதோ தமிழினத்தின் ஒற்றுமையைச் சிதைப்பதாகும் என்பதைத் தமிழ் மக்கள் முழுமனதுடன் நம்பவேண்டும்.

—'இலங்கை மாறன்''

# வல்வையில் மீனவ இளைஞர் சுட்டுக்கொலை!

வல்வெட்டித்துறை : புதுரோட்டைச் சேர்ந்த 28 வயது நிரம்பிய இரத்தினசாமி என்ற இளைஞர் மீன் பிடிக்கக் கடலுக்கு சென்று திரும்புகையில் பதைபதைக்க கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகக் கூறப்படும் பரிதாப சம்பவத்தையிட்டு பூரண விசாரணை நடத்துமாறு பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினம் பொலீஸ் இராணுவ அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக கடற்படை வீரர் ஒருவர் சந்தேகத்தின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

---

கடமை

''உன் கடமையை செய்ய முயல்க, அப்பொழுது உன் தகுதியை உடனே அறிந்து கொள்வாய்.''

—கதே.

மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளைச் சேகரித்து அனுப்பி அறிவு நூல்களை வாங்கிப்படியுங்கள்.

**மில்க் வைற் சோப் தொழிற்சாலை**

**த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையில்வாடும் உணர்ச்சிக் கவிஞர்

## காசி ஆனந்தன் தமிழர்களின் இணையற்ற பொக்கிஷம்!

கவிஞர் காசி ஆனந்தன் என் உயிரனைய நண்பராவர். ஏறக்குறைய 15 ஆண்டுகளாக எனக்கு அவரைத் தெரியும். கடந்த 7 ஆண்டுகளுக்கு மேலாக அவருக்கும் எனக்குமுள்ள உறவு மிக நெருக்கமாகிவிட்டது. உண்மையில் ஒரு கவிஞனின் இயல்பிற்கு ஏற்ப அவர் ஓர் 'உணர்ச்சிப் பிழம்பு'

### செயல் வீரர்

அவர் வெறும் கவிஞர் மட்டுமல்ல தன் கவிதையில் வடிப்பதை செயலிற் காட்டுகின்ற செம்மலுமாவர். வெறும் சொற் சிலம்பாடுகின்ற சொல் வீரரல்லர் அவர். தான் சொல்லியதைச் சொல்லியவாறு செயலில் காட்டும் செயல்வீரர் அவர். அவரின் அரசியல் வாழ்வு 15 ஆண்டுகளைத் தாண்டி விட்டது. இக்கால கட்டத்தில் ஏறக்குறைய பத்துத்தடவை காவலரின் கைவரிசைக்கு ஆளாகியுள்ளார். எதற்கும் அஞ்சாத நெஞ்சம் படைத்தவர். அவரிடம் உடல்வலிவில்லை. ஆனால் அவரின் உள்ள வலிவு உலகையே வியப்பில் ஆழ்த்தும்.

### சிறைச்சாலை இவருக்குப் பூஞ்சோலை

தாயகத்தில் கலை இளவல் (பீ. ஏ.) பட்டப்படிப்பில் ஈடுபட்டிருக்கையில் இந்தி அரக்கியை எதிர்த்துபோர்க் குரல் எழுப்பியவர். வண்டமிழில் வானொலி இருக்கையில் அருவருப்பூட்டும் 'ஆகாசவாணி' ஏன் என்று எழுச்சி ஊட்டும் கேள்வி கேட்ட ஏந்தல் இவர்.

சேயகமாம் நம் ஈழத்தில் சீறிடும் சிங்களத்தை எதிர்த்து அடியும் உதையும் வாங்கி பலதடவை சிறை சென்ற செம்மல் இவர். ஆகவே அண்மையில் இவர் பெற்ற சிறைவாழ்வு சிந்தையைக் கலக்கும் வாழ்வல்ல. மாருக சிறப்பூட்டும் வாழ்வாக இவருக்கு விளங்குகிறது.

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எம்மை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை' என்ற புரட்சிக் கவிஞனின் பாடல் இந்த உணர்ச்சிக் கவிஞனுக்கு அமுத ஊற்ருகும். இத்தகைய சிறப்பியல் புகளை இவர் பெற்றிருப்பதினுல் தமிழக அரசே இவருக்குத் தலை வணங்குகிறது.

### கவிஞர்பற்றி முதல்வர் கருணாநிதி மொழிந்தவை

'தமிழன் எழுச்சிக்குக் கிடைத்த தக்கதோர் படைக்கலன் கவிஞர் காசி ஆனந்தன்' என்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி சில ஆண்டுகளுக்கு முன்பு கூறியகூற்று வெறும் புகழ் உரையல்ல பொருள் பொதித்த பொன்னுரையாகும். காலம் இவர் கூற்றின் ஆழத்தை அகிலத்திற்கு உணர்த்தியே தீரும். வரலாறு படைப்போர் இவர் மொழிந்த மொழி வாய்மையின் வாய்ப்பட்டதே என்று வரைந்தே தீரவேண்டும்.

### தமிழை அழிக்கும் சட்டம் தரைமட்டமாகும்

**'இந்நாட்டுச் சட்டம் என் தமிழை அழிக்குமெனில் என் உடல் அச்சட்டத்தை எதிர்த்தழிக்கும் என்பது மெய்'** என்று அவர் அன்று சிங்கள சிறீயை எதிர்த்து முழங்கிய முழக்கம் அவர் உள்ள உறுதிக்கு ஓர் அரிய சான்ருகும்.

### தமிழ் எங்கள் உயிர் என்று வாழ்பவர்

காசி ஆனந்தன் சில ஆண்டுகளுக்கு முன் படைத்தளித்த தமிழன் கனவு தமிழ் இலக்கிய உலகில்

**ஈழவேந்தன்**

அவருக்கு ஒரு தனியான இடத்தையும் பெற்றுத் தந்துள்ளதென்பது தமிழ் அறிஞரின் முடிந்த முடிபு. ஆனல் இந்நூல் வெளிவர முன்பேயே இவர் வெளியிட்ட 'தமிழ் எங்கள் உயிர்' என்ற நூலும் ஏனைய தனிப் பாடல்கள் பலவும் அவர் ஓர் உண்மை உணர்ச்சிக் கவிஞர் என்பதை உலகிற்கு காட்டிவிட்டது.

'மறவர் படைதான்
தமிழ்ப்படை குல
மானம் ஒன்றுதான்
அடிப்படை
வெறிகொள் தமிழர்
புலிப்படை! அவர்
வெல்வார் என்பது
வெளிப்படை'

என்று தொடர்ந்து செல்லும் அவரின் பாடல் உணர்ச்சியின் உச்ச நிலைக்கு எம்மை அழைத்திச் செல்லும்பாடலாகும். ஒவ்வொரு தமிழ் மகனும் படித்து பயன் பெறவேண்டிய பாடலாகும் தமிழ் நெறியோடு வாழும் எம்மை வெறி கொண்டு தாக்குபவரை தக்க முறையில் தாக்கும் பாடலாக அமைந்து விளங்குகிறது.

### வன்னியரை வழிபடுபவர்

எமக்கு வாழ்வளித்த வன்னியர் வானுலகு புகுந்த போது எல்லை மீறிய துயரினுல் உந்தப்பட்டு

'சிறைகொண்டு
வைத்தாலும்
எனது வாழ்வு
செத்தாலும் பட்டாலும்
சிதறினுலும்
குறிகொண்டு சுட்டாலும்
ஈழநாட்டில்
குடியென்று தமிழனை
வாழச் செய்வேன்
அறிவின்றி வாட்டாதீர்
தமிழர் கூட்டம்
ஆடல்ல மாடல்ல
தெரிவீர் என்று
வெறிகொண்டு போரிட்ட
மறவன் மேனி
வீழ்ந்தாலும் புகழுக்கு
வீழ்வுமுண்டோ

என்றுவன்னியரின் புகழை இவர் பாடியதை எண்ணி எண்ணிப் பார்க்கும்போது வன்னியரின் உள்ளத்தை எவ்வளவுதூரம் ஊடுருவிப் பார்த்துள்ளார் என்பதை யாம் உணரத்தக்கதாய் இருக்கிறது.

### "தமிழன் கனவில்" கவிஞர் காணும் கனவு

இதுவரை வெளிவந்த கவிஞரின் படைப்புகளில் தலையாய படைப்பாக மிளிரும் "தமிழன் கனவு" உண்மையில் கவிஞர் காணும் கனவாக விளங்குகிறது. அவர் காணும் கனவு இன்றே நனவாக மாறக் கூடாதா என்ற ஏக்க உணர்ச்சி எம் உள்ளத்தில் எம்மையறியாமலே ஏற்படுகிறது. அந்தளவிற்கு கவிஞர் எம்மை ஆட்கொள்கிருர்.

"நாஞெருவன் நாவினிக்க நெஞ்சினிக்க என்னுடையான் அடி நயந்து மாவிளக்கின் ஒளியேற்றி மலர் சொரிந்து கவி பொழிவேன்' என்று இந்நூலில் இறை வாழ்த்துடன் புறப்படும் கவிஞர் "தெய்வம் வாழ்த்திப்புறப்பட்ட நான் "தேசம்" அமைக்கப் புறப்பட்டேன்" என்று எழுச்சி என்ற பகுதியில் ஏற்றமுற எடுத்துரைக்கிருர்.

### அறப்போரில் அசைக்க முடியாத நம்பிக்கையுடையவர்

அவ்விதம் தமிழன் னவில் கவிஞர் காணும் இனிய கனவுகள் அனைத்தையும் ஒவ்வொன்ருக ஆராய்ந்து சுவைக்க என் உள்ளம் விரைகிறது. ஆனல் இடவசதியின்மையினுல் ஓர் இரு பாடல்களே இங்கு எடுத்தாளப்படும்.

காந்தீயக் கோட்பாட்டில் ஊறித்திளைத்த கவிஞர் எம் இன விடுதலையை அறப்போரின் வழியிலேயே பெற விரும்புகிருர். இதை அவர்

மற்ருேர் தரும்
துயர்தனை ஏற்றல்
எனினும் மனம்
துணிந்து
குற்றங் குற்றமே
எனத் தீங்கை
எதிர்த்துக்
குமுறி நிற்றல்
சற்றேனும் பிறரை
வருத்தாமல்
தமையே வருந்திப்
போரில்
வெற்றி அறவழியில்
விளைத்திடுதல்
எனுமோர்
தெய்வவேலை

என்ற பாடல் வாயிலாக சற்றேனும் பிறரை வருத்தாமல் தமையே வருத்தி அறப்போரில் வெற்றிகாண விழைபவர் நம் கவிஞர் என்பது தெற்றெனப் புலப்படுகிறது.

இவரின் இப்பாடலை உள்ளத்து உணர்ந்து படிக்கின்றபோது ஒரு அயர்லாந்து தேசபக்தன் கூறிய பின் வரும் உள்ளம் உருக்கும் கூற்று என் நினைவிற்கு வருகிறது. இதோ அவன் செப்பியவை

"This is a war of endurance. It is not they who can inflict more suffering but they who can endure more that will triump in the end" (இப் போராட்டம் தாங்கும் ஆற்றலைப்பொறுத்தது. இந்தப் போராட்டத்தின் வெற்றி யார் கூடியளவு துயரைத் திணிக்கிருர்கள் என்பதில் தங்கியிருக்கவில்லை. யார் இந்தத் துயரைத் கூடியளவு தாங்குகிருர்கள் என்பதிலேயே தங்கியிருக்கிறது.)

யாம் இன்று எம் இனத்திற்காக நடாத்தும் விடுதலைப் போராட்டம் இந்தத் தத்துவத்தின் அடிப்படையிலேயே அமையவேண்டும்.

### தமிழன் தன்னை ஆளவேண்டும்

இந்நூலின் இறுதிப் பகுதியில் "உள்ளம் உடையீர் எழுவீர்! தமிழர்க்கோர் ஆட்சி படைமின்! இன்றே படைப்போம்! என்று அவர் விடும் அழைப்பு வெறும் கனவில் விடும் அழைப்பல்ல. தமிழனின் அடிமைவிலங்கறுக்க—விடுதலைவேட்கை கொள்ள விடப்பட்ட வியத்தகு அழைப்பாகும்.

### காசி ஆனந்தன் காணும் கனவு நனவாகும்

கவிஞர்கள் கனவு காண்பது இயல்பு. காண்கின்ற கனவுகள் அனைத்தும் நனவாகாவிடினும் பல பலித்ததும் உண்டு. பாரதி கண்ட கனவு பாரதத்தின் விடுதலை. அது நனவாய் விட்டது. இக்பால் கண்ட கனவு பாக்கிஸ்தானின் தோற்றம். அதுவும் நனவாகியது. ஆங்கில அமெரிக்க அயர்லாந்து பிரெஞ்சுக் கவிஞர்கள் கனவெல்லாம் நனவாகியதற்கு வரலாறுசான்றுகூறும். எம் தமிழகத்தில் "தமிழ் அறிந்த தமிழன்தான் தமிழ் நாட்டின் முதல் அமைச்சனய் வருதல்வேண்டும்" என்று புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் கண்ட கனவு வீண்போகவில்லை. அறிஞர் அண்ணுவின் ஆட்சியும் கலைஞர் கருணுநிதியின் ஆட்சியும் எதை எடுத்து உணர்த்துகிறது. ஆகவே கவிஞர் காசி ஆனந்தன் சிறையில் வீணே வாடவில்லை. அவர் கண்ட தமிழன் கனவு ஒரு கால் நூற்ருண்டிற் கிடையில் இல்லை ஒரு பத்தாண்டுகளுக்கிடையில் நனவாகியே தீரும். இதுஉண்மைவெறும் புகழ்ச்சியில்லை.

கவிஞர் கண்ட ஈழத்தமிழர் ஆட்சி தோன்றும் போது யான் ஒரு கனவு காண்கிறேன். அந்தத்தமிழ் அரசில் கவிஞர் காசி ஆனந்தன் அரசவைக் கவிஞராக வீற்றிருக்கும் கண்கொளாக் காட்சியே யான் காணும் கனவு, யான் கவிஞன் அல்ல. சுவைஞன் தான். ஆனுலும் என் கனவும் நனவாகும் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. காரணம் இதுவரை யான் கண்ட கனவுகள் அனைத்தும் பலித்துள்ளன.

---

## புதிய அரசியல்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டுமுறையும் அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறினுர். 6-3-1971இல் திரு. டட்லி சேனநாயக்கா கேட்ட கேள்வியின் பின் நான் அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவிடம் பின்வரும் கேள்வியைக்கேட்டேன்.

"இந்த அரசாங்கத்தின் அரியணை உரையில் தமிழ் மொழிச் சட்டம் நீதியாகவும் நிறைவாகவும் நடைமுறைப்படுத்தப்படுமென இந்த அரசாங்கம் கூறியுள்ளதெனினும் இன்றுவரை அரசாங்கம் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) பிரமாணங்களை நடைமுறைப் படுத்தவில்லை என்பதையும், நடைமுறைப்படுத்துதற்கு அரசகரும மொழித் திணைக்களமோ, பொறுப்பான அமைச்சரோ, அமைச்சரவையோ எவ்வித பணிப்புக்களையும் பிறப்பிக்கவில்லை என்பதையும்; இதனல் தமிழ் மக்களுக்கு நாள்தோறும் தனிச் சிங்கள கடிதங்களும் அறிக்கைகளும் பிறவும் அனுப்பப்படுகின்றன என்பதையும் அவர் ஏற்றுக்கொண்டு, இனிமேலாகுதல் தமிழ்மொழி உரிமையை முழுமையாகக் கொடுத்தற்கு உடனே நடவடிக்கை எடுப்பாரா?'

எனது இந்தக் கேள்விக்கு அவர் நேர் மறுமொழி கொடுக்காமல் தமிழ் மொழிப் பிரமாணங்களை நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று மீண்டுங்கூறி மழுப்பித் தப்பிக்கொண்டார்.

—தொடரும்.

---

## நாடாளுமன்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை. மாருக இனஉணர்ச்சி பேரெழுச்சியைக் கொடுக்கின்றது. 1961ம் ஆண்டு உலகே வியக்கும் வண்ணம் அகிம்சை போராட்டம் நடத்தினர். (— விசுவாசப் பிரமாணம் எடுத்தபின்னர் கூட).

ஆனபடியால் குடியரசை பூரணமாக எதிர்க்கும் தமிழர் கூட்டணியினர் தேசிய பேரவைக்கு செல்லுதல் எவ்வகையிலும் எதிர்காலப் போராட்டத்தை நசுக்கிவிடும் என்று பயப்படத் தேவையில்லை. அங்கு சென்றபின்பும் நாம் தொடர்ந்தும் எமது போராட்டங்களை பார்புகழ நடத்தலாம். சுயாட்சியை நிலைநிறுத்தலாம்.

இவர்கள் செல்லாதுவிட்டால் தமிழர்களின் உண்மையான தலைவர்கள் மக்களிடமிருந்து மறைக்கப்பட்டு துரோகிகள் தலைவர்களாக அறிமுகப் படுத்தப் படுவார்கள்.

தமிழர்கள் பொற்காலம் இராச இராச சோழன் ஆண்ட காலம் அல்ல-தந்தை செல்வா தலைமையில் தமிழர் கூட்டணியினர் போராட்டம் நடாத்தி சுயாட்சி பெறும்காலமே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கூட்டணி தீட்டிட வேண்டிய இருவகைத் திட்டங்கள்!

**அரசியல் மடல்**

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் போட்டியிட்டு, அவர்களைத் தோற்கடிப்பதன் மூலம் மக்களின் எதிர்ப்பை அரசுக்கு உணர்த்திடுவது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் அந்த நிலைதான் இல்லையே!

**தமிழினத்தின் சுதந்திரப்போராட்டத்தின் ஒரு கட்டத்தில் நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்திடும் ஒரு நிலை நிச்சயம் வரத்தான் செய்யும். அத்தகைய காலம் இன்னும் கனியவில்லையென்பதே எனது கருத்தாகும்!**

நாடாளுமன்றத்தை பகிஷ்கரிப்பதானால் தமிழர் பிரதிநிதிகள் அனைவருமே பகிஷ்கரித்து வெளியேறுகின்ற ஒரு சூழ்நிலை தோன்றிட வேண்டும்—அப்படி வெளியேறினால் ஆகக் குறைந்தது ஒரு மூன்று திங்களுக்கிடையிலாவது தமிழினத்தின் சுதந்திரத்தை நிலைநாட்டக்கூடிய வல்லமை நம்மிடம் இருந்திட வேண்டும். இந்த இரண்டு நிலைமைகளும் தற்போது இல்லையென்பதை நாம் அறிவோம்! எனவே வெறுமனே உணர்ச்சிவசப்படாது வினை வலியும் தன் வலியும், மாற்றான் வலியும் துணை வலியும் கவனித்து நாம் இச்சமயத்தில் செயற்பட வேண்டும்!

இரண்டொரு திங்களுக்குமுன் 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஏட்டிலே 'ஊர்மிளா பட்னிஸ்' என்னும் ஒரு பிரபல பத்திரிகையாளர் ஈழத் தமிழர் பிரச்சினைபற்றி எழுதியிருந்த ஒரு கட்டுரையைப் படித்தேன். அதில் வங்க தேசப் போராட்டத்தையும், ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டத்தையும் ஒப்பிட்டு அன்னார் எழுதியிருந்தார். அதில் என்ன கூறியிருந்தார் தெரியுமா?

''வங்க மக்கள் அவாமிலீக் தலைமையில் நூற்றுக்கு நூறு வீதம் ஒன்றுபட்டனர். வங்க மக்களுக்கு சுயாட்சி வேண்டுமென்ற கருத்துடையோர் வங்கத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றியும் பெற்றனர். இதன் மூலம் சுயநிர்ணய உரிமை கோரும் அதிகாரத்தை அவாமிலீக்கிடம் வங்க மக்கள் பூரணமாக ஒப்படைத்திருந்தனர். ஆனால் இலங்கையிலோ, தமிழ் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தொகுதிகளில் மூன்றில் இரண்டுக்கும் குறைவானதொகுதிகளையே கடந்த தேர்தலில் தமிழரசார் கைப்பற்றியிருக்கிறார்கள். எனவே முழுத் தமிழினத்துக்கும் சுயநிர்ணய உரிமைகோர தமிழரசுக் கட்சிக்கு அதிகாரமில்லை''

—இவ்வாறாக அந்தப் பத்திரிகையாளர் எழுதியிருந்தார். உண்மை நிலையை இப்படி அவர் சுட்டிக் காட்டும்போது யார்தான் அதை மறுத்திட முடியும்?

இதனை ஏன் நான் இங்கு குறிப்பிடுகிறேனென்றால்—நாடாளுமன்றத்தை நாம் பகிஷ்கரித்திடின் அதன் அடுத்த கட்டம் நிச்சயம் தமிழினத்தின் சுதந்திரப் போராட்டமாகவே இருந்திடவேண்டும். அப்படி சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை முன் வைத்து ஒரு பெரிய விடுதலைப்போராட்டத்தை நாம் நடத்தும்போது, உலகத்தின் கண்களுக்கு அது நீதியானதாக தெரியவேண்டும் — அதாவது சுய நிர்ணய உரிமைக் கோரிக்கையை தமிழ் தேசிய இனம் நூற்றுக்கு நூறு வீதம் பொதுத் தேர்தலில் அங்கீகரித்திருக்கிறது—சுதந்திரத்துக்குப் போராடுவதற்கு—தமிழர் கூட்டணிக்கு அனுமதி வழங்கியிருக்கிறது என்பதை உலக மக்கள் ஐயத்துக்கிடமின்றி ஒப்புக் கொள்ளும் நிலை இருந்திடவேண்டும். அந்த நிலை இன்று இல்லை என்பதைத் தான் ஊர்மிளா பட்னிஸ் எழுதியுள்ள கட்டுரை எடுத்துக்காட்டுகிறது!

அதுமட்டுமல்ல நண்பா—விடுதலைப் போராட்டம் வெற்றியடையக் கூடிய சாதகமான காலம் அறிந்தே நாம் போர்தொடுத்திட வேண்டுமே தவிர உணர்ச்சிவசப்பட்டு—போதிய திட்டங்களின்றி அவசரப்பட்டு இனத்துக்கு அழிவுதேடிடக் கூடாது!

வங்கதேசத்தில் வாழ்ந்த ஏழரைக்கோடி மக்களில் 30 இலட்சம்பேர் மாண்டார்கள் விடுதலைப்போரில் என்றால், இந்நாட்டில் தமிழினத்தின் மொத்த சனத்தொகையே 30 இலட்சம் தான் என்பதையும் மறந்து விடக்கூடாது!

எனவே நண்பா, இன்றைய நிலையில் விடுதலைப் போராட்டத்துக்கு மக்களைத் தயார் படுத்துவது—சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவாக மக்களைத் திரட்டுவது—உலகில் சுதந்திரமாக வாழும் சின்னஞ் சிறு இனங்களின் வீரவரலாறுகளை எடுத்துரைத்திடுவது—போன்ற இன்னபிற கடமைகளிலேயே நாம் இப்போது ஈடுபடவேண்டும்!

**சுய நிர்ணய உரிமைக்கோரிக்கையின் பின்னால் தமிழ் ஈழம் ஓரணியில் திரண்டு விட்டது; தமிழ் ஈழத்தின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் அனைவரும் ஒரே குரலில் சுயாட்சி கோருகின்றனர் எனும் நிலைமையைத் தோற்றுவித்திட நாம் முதலில் முயல வேண்டுமே தவிர நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பல்ல முதலில் நடைபெற வேண்டியது!**

**நாடாளுமன்றத்துக்கு செல்வதால் தமிழினத்துக்கு ஏதோ புதிய சாதனையை ஏற்படுத்தி விடலாமென்பதல்ல — நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதற்கு தக்க தருணமும் சூழ்நிலையும் இன்னும் உருவாகவில்லையென்பதே எனது கருத்து! எதைத் முதலில் செய்யவேண்டும்; எதை எந்தக்கால கட்டத்தில் செய்யவேண்டும் என்று முறை வகுத்து நாம் செயற்படாவிட்டால் விடுதலைப் போரில் வெற்றி கண்டிட முடியாது.**

•

விடுதலை உணர்ச்சியின் உத்வேகத்தால் துடித்துநிற்கும் தமிழ் இளைஞர்களும் மாணவர்களும் இவற்றையெல்லாம் ஆற அமர அறிவுக் கண்கொண்டு சிந்தித்துப்பார்த்திடவேண்டும்.

•

யாழகத்தில் கூடும் தமிழர் கூட்டணியும் தமிழரசுப் பொதுச்சபையும் இரண்டு வகையான திட்டங்களைத் தீட்டிட வேண்டும். முதலாவது, புதிய அரசியல் சாசனத்தின் மூலமும், மற்றும் வழிகளிலும் தமிழினத்துக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்துப் போராடுவதற்கான குறுகிய கால திட்டம். தமிழினத்துக் காளையரின் விடுதலை உணர்வு மங்கி மறைந்திடாமல் உற்சாகம் குன்றிடாமல் இருப்பதற்கு ஏற்ற முறையில் இத்தகைய திட்டங்கள் தீட்டப்படுவது அவசியம்!

**பொங்கியெழுந்துள்ள தமிழினத்தின் விடுதலை வேட்கையும் எதிர்ப்பு உணர்ச்சியும் தணியாமல் இருந்திட வேண்டும். தீ அணைந்து போகாமல் இருந்திட (To keep the fire burning) ஏற்ற திட்டங்களை தமிழர் கூட்டணி உருவாக்கிட வேண்டும்.**

இரண்டாவது — தமிழ் தேசிய இனத்தின் எதிர்கால சுதந்திரத்துக்கு நாம் ஆற்றிட வேண்டிய பணிகள் பற்றிய வேலைத்திட்டம்! இது ஒரு நீண்டகாலத் திட்டமாக இருக்கலாம் — ஆனால் முறையாக இதனை வகுத்து காலமறிந்து செயல்படுத்துவது மிகவும் அவசியம்! இங்கிலாந்திலும், மலேசியாவிலும், மற்றும் நாடுகளிலும் வாழும் இலங்கைத் தமிழர்கள் நமக்கு உதவிட துடியாய்த் துடிக்கின்றனர்! எனவே விடுதலை போராட்டத்துக்கு சீரான திட்டம் ஒன்று வகுத்து செம்மையாக அதைச் செயற்படுத்திட வேண்டியது நம்முடைய தலைவர்களின் கடமையாகும்!

தமிழ் இளைஞர்களும், மாணவர்களும் விடுதலை உணர்ச்சியின் உச்சக் கட்டத்தில் இன்று நிற்பதை நான் அறிவேன். இந்த உணர்ச்சியை அவம் போகவிடாது இனத்துக்கும் மொழிக்கும் பயன்தரும் வகையில் திருப்பி விடக்கூடிய நல்ல செயல் திட்டங்களை தமிழர் கூட்டணி உருவாக்கும் என்று நம்புவோம்!

• உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

# நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பது அறிவீனம்

இன்று தமிழ் பேசும் மக்களை ஆட்டிப்படைக்கும் விடயம் தமிழர் கூட்டணியைச்சேர்ந்த பா. உ. க்கள் தேசிய பேரவைக்குச் செல்வதா இல்லையா என்பதே, ஆனால் இன்று உள்ள நிலையில் அறிவில் முதிர்ச்சி அடைந்தோர் அரசியலில் போதிய காலம் அனுபவமடைந்தோர் தேசிய பேரவைக்குச் செல்ல வேண்டுமென்கிறார்கள். அதற்கு உயர்திரு. வி. சுந்தரலிங்கம் அவர்கள் பேரவைக்குச் செல்லுங்கள் என்று கூறுவதே போதிய சான்றாகும். தேசிய பேரவைக்குச் செல்ல வேண்டாம் என்று கூறுபவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்கள் என்றால் அது மிகையாகாது.

இளைஞர்கள் துடிப்புடன் இயங்குவார்கள். ஆனால் அவர்கள் நீண்டகால அடிப்படையில் திட்டமிட்டு இயங்கமாட்டார்கள். இப்போதுள்ள உணர்ச்சிக்கு பதவிகளைத் துறப்பின் நாம் எமது பூரண எதிர்ப்பை அரசோச்சுபவர்களுக்கு எதிர்காலத்தில் காட்ட முடியாத சந்தர்ப்பம் ஏற்படலாம். இளைஞர்களின் உணர்ச்சியை மையமாக வைத்து, தமிழர்களையும் அவர்தம் மொழியையும் அழித்தொழிக்க சதாகாலமும் எண்ணமிடும் பத்திரிகைகள் தமிழர்களின் விடுதலை வேட்கையை எதிர்காலத்தில் பூரணமாக அமுக்குவதில் ஆர்வம் காட்டவே செய்யும். ஆனபடியால் அதிமுக்கியகட்டத்தில் இருக்கும் தமிழ் மக்களை, அவர்களிடையே உள்ள ஒற்றுமையை மேலும் வலுவுடையதாக்க — தமிழர் கூட்டணியினர் தமது பிரசாரத்தை முடுக்க வேண்டும். இளைஞர்கட்கும் தமக்கும் இடையே இறுக்கமான பேச்சுக்களை நடாத்தி நாம் ஏன் பேரவைக்குச் செல்ல வேண்டும் என்று அவர்கட்கு கூற வேண்டும். இல்லையேல் 25ம் திகதி பேரவைக்குச் செல்ல வேண்டுமென்று கூட்டணி முடிவெடுக்கின் மாணவர்கள், இளைஞர்கள் என்போர்களிடையே இருந்து எதிர்பாராத எதிர்ப்புக் கிளம்பலாம்.

**கட்டுபெத்தை-இரா.**

தமிழர் சுயாட்சிக் கழகமும், அதன் தலைவர் நவரத்தினமும் தமிழர்தம் ஒற்றுமையைக் குலைக்கும் செயலில் ஈடுபடுவது மனவருத்தத்தைக் கொடுக்கும் செயலாகும்.

1947ம் ஆண்டு சோல்பரி அரசமைப்பு இலங்கையில் அமுல் ஆக்கப்பட்டபோது அதற்கெதிராக தலைவர்கள் கண்டனக்குரல் எழுப்பினர். அவர்கள் அந்த அமைப்பை மாற்றவில்லை. ஆனாலும் அதற்கு விசுவாசமாக பிரமாணம் எடுத்தனர். விசுவாசப் பிரமாணம் எடுத்தமையால் 25 வருடங்கள் சென்ற பின்கூட நாம் பூரணமாக அடிமைகள் ஆக்கப்படவில்லை. உணர்ச்சி மங்க

(8-ம் பக்கம் பார்க்க)

**'அண்ணாவின் தமிழ் நாடு கண்டேன்'**

—பயணக் கட்டுரை இடமின்மையால் இவ்வாரம் இடம்பெறவில்லை. அடுத்த வாரம் வெளிவரும். வாசக நண்பர்கள் பொறுத்தருள்க.

—ஆர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.


## சிலோன் என்டடெயின்மென்ட்ஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கிறது



13வது வாரம் சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்)

சிவாஜிகணேசன், ஜெயலலிதா, பாலாஜி, சந்திரபாபு, சுந்தரராஜன், ரங்கராவ், நாகையா, ராகவன், பண்டரிபாய், மனேகர்

நடிக்கும் சுஜாத்தாவின்

# ராஜா

(ஈஸ்மன் கலர்)

---

8வது வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு)

பிளாசா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்நகர்)

லிடோ (யாழ்நகர்)

சிவாஜி ஜெயலலிதா

(இணைந்து நடித்த முதல் வண்ணப்படம்)

பாலாஜி—நிர்மலா—லட்சுமி

சோ—தேங்காய் சீனிவாசன்

குழந்தை நட்சத்திரம் மாஸ்டர் பிரபாகர்

உட்பட பன்னிருவர் நடித்த

ஜேயார் மூவீஸ்



# எங்க மாமா

(ஈஸ்மன் கலர்)

---

2வது வாரமாக காட்சியளிக்கிறது

கொழும்பில் கடைசித் தடவையாக செல்லமகால்

சிவாஜிகணேசன் - சாவித்திரி

கே. பி. சுந்தராம்பாள். டி. ஆர். மகாலிங்கம்

நாகேஷ் நடித்த ஏ. பி. நாகராஜனின் வண்ணப்படம்

# திருவிளையாடல்

---

5வது வாரம்

கெயிட்டி (கொழும்பு) வின்சர் (யாழ்நகர்)

கே. ஆர். விஜயா

ரவிச்சந்திரன் நாகேஷ்

சி. கே. பகவதி நடித்த

# சபதம்


சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ, இலக்கத்தில் 1972ம் வருடம் ஜூன் மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org